பக்கங்கள் : 20
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 266 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 26 ஞாயிற்றுக்கிழமை (11.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### இலங்கைக்கு மேலும்
# 40 மில்லியன் வழுங்க நடவடிக்கை
### சமந்தா பவர் தெரிவிப்பு



(கொழும்பு)
விவசாயிகளுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்காக இலங்கைக்கு 19

# அரச வன்முறையாளர்களுக்கு எதிரான நடவடிக்கை என்ன?
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி



(கொழும்பு)
"கடந்த மே 9ஆம் திகதி அரச வன்முறையை முன்னெடுத்த ராஜபக்ஷக்கள் மற்றும் அந்தக் கும்பல்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? விசாரணைகளுக்கு என்ன நடந்தது? இவ்வாறு அரசிடம் கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

தமித அபேரத்ன கலைஞர்கள் 19

### நாமல், ஜீவன் உட்பட
# புதிதாக 12 பேருக்கு அமைச்சுப் பதவி?

(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் புதிதாக 12 அமைச்சர்களை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 12 பேர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்தும் எஞ்சிய இருவர் வேறு கட்சிகளிலிருந்தும் நியமிக்கப்படவுள்ளனர் 19

# தமிழ் அரசியல் கைதிகளை சந்திப்பதற்கான பயணம்
### யாழில் இருந்து நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
**ஐ.நா அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை சந்திப்பதற்கான பயணம் யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று ஆரம்பமானது.**



நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை சந்திப்பதற்காக அரசியல் கைதிகளின் உறவுகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு நேற்றைய தினம் சர்வதேச கவனமொன்றை ஈர்த்துக் கொள்ளும் வகையில் பயணத்தை மேற்கொண்டனர்.

குரலற்றவர்களின் குரல் அமைப்பு, யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மதியம் 2 மணியளவில் நடத்திய ஊடக சந்திப்புக்கு பின்னர் இந்த பயணத்தை ஒழுங்குபடுத்தப்பட்ட பேருந்தில் மேற்கொண்டனர்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் 19

### உடுவில் மல்வம் பகுதியில்
# 20 வயது பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
உடுவில் மல்வம் பகுதியில் இளம் பெண் ஒருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த ரிச்சட் ரேமன் மேனுஜா (வயது - 20) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் திடீர் மரண விசாரணை 19



பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் நேற்று ஆரம்பம்.

### திருக்கோணேஸ்வரத்தை ஆக்கிரமிப்பதற்கு எதிராக
## சைவ சமய அமைப்புக்கள் ஒன்றுகூடி தமது கருத்தை வெளிப்படுத்தும் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)
திருக்கேணேச்சரத்தை ஆக்கிரமிப்பதற்கு எதிராக சைவ சமய அமைப்புகள் ஒன்றுகூடி தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் விசேட கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிராந்திய அலுவலக மண்டபத்தில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்களின் பூர்வீகச் சொத்தாக விளங்கும் திருகோணமலை திருக்கோணேஸ்வர் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் 19

# இலங்கை மீதான கண்காணிப்பை மேலும் வலுப்படுத்துங்கள்
### மனித உரிமைகள் பேரவைக்கு மன்னிப்புச் சபை அழைப்பு

(கொழும்பு)
இலங்கை மீதான கண்காணிப்பை வலுப்படுத்துமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை அழைப்பு விடுத்துள் 19

AMNESTY INTERNATIONAL

# ஐ.நா அமர்வு நாளை ஆரம்பம்
### இலங்கைக்கு கடும் நெருக்கடி ஏற்படலாம்

(ஜெனிவா)
ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது.

நாளை ஆரம்பமாகும் கூட்டத் தொடர் எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந் நிலையில் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளின் தண்டனை விபரத்தை தாருங்கள்

## நீதியரசர் விக்கினேஸ்வரன்

(கொழும்பு)

அரசியல் கைதிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் எந்தெந்தக் குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக தண்டனை அனுபவிக்கின்றார்கள், அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டுள்ளன அல்லது தடை உத்தரவு பெற்றுள்ளார்கள் என்ற விபரங்களை எடுத்துத் தாருங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்கச் செல்லும் உறவினர்களுடனான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்கள் பயணம் எமது தமிழ் அரசியற் கைதிகளுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தைக் கொடுப்பதாக என்று முதற் கண் வாழ்த்துகின்றேன்.

எனினும் அவர்களுக்கு நன்மைகள் உடனேயே கிடைத்து 'விடும் என்று எண்ணுவதைத் தவிருங்கள்.

காரணம், எவ்வளவு தான் ஜனாதிபதியானவர் எமக்கு உத்தரவாதங்களையும், உறுதி மொழிகளையும் தந்தாலும் அவர் இன்னொரு இனச் சார்புடைய கட்சியின் ஆதரவை எதிர்பார்த்தே இருக்கின்றார் என்பதை நீங்கள் மறந்து விடலாகாது.

அவர்கள் இவரைப் பாவிக்கின்றார்கள். இவர் அவர்களைப் பாவிக்கின்றார். இது தான் இன்றைய நிலை.

இருந்தும் நாம் எமது கடமைகளைக் கட்சிதமாக நடத்திச் செல்ல ஆயத்தமாக வேண்டும். இதன் காரணத்தினால் நான் உங்களிடம் இருந்து சில விபரங்களை எதிர்பார்க்கின்றேன் என்பதைச் சொல்லிவைக்கின்றேன்என்றார். (ம)


## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பக பிள்ளையார் கோவிலையும் பிரதேச சபையையும் அண்மித்த பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.
பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம்
(3 பரப்பாகவும் பிரித்து தரப்படும்.) (12735)

**077 538 4132**
**070 617 2892**



## சொர்க்கம் திருமண சேவை

- 1987 ஆம் ஆண்டு கனடாவில் வசிக்கும் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த ஆணிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை.
- 1990 ஆம் ஆண்டு கனடாவில் வசிக்கும் அச்சுவினி 4ஆம் பாதம் நட்சத்திரத்தில் உள்ள பெண்ணுக்கு உள்நாட்டில் மணமகன் தேவை.
- 1991 ஆம் ஆண்டு பிறந்த அச்சுவினி சூரியன் செவ்வாய் உள்ள ஆணிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை (சீதனம் எதிர்பார்க்கவில்லை)
- 1984 ஆம் ஆண்டு பிறந்த கனடாவில் வசிக்கும் அனுஷம் நட்சத்திரத்தில் (Divorce) ஆணிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை.

(12749)

சொர்க்கம் திருமண சேவை

**0011 4166 661855 / 077 887 6969**


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

எமது நிலையத்தின் நீண்டகாலப் போஷகராக இருந்து சங்க வளர்ச்சிக்கு எப்போதும் தோள் கொடுத்து நின்றவராகிய

அமரர் **நாகலிங்கம் இரட்ணம்**

அவர்களது முதலாம் ஆண்டு நினைவாக எமது அஞ்சலியை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (12746)




நிர்வாகத்தினர்
கலைவாணி சனசமூக நிலையம்,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1979 இல் பிறந்த அச்சுவினி நட்சத்திரமுடைய லண்டனில் Visa உள்ள Business செய்கின்ற JAFFNA (BSC) London (MSC) கல்வித் தகைமை உடைய மணமகனுக்கு (உள்நாடு/ வெளிநாடு) மணமகள் தேவை. (12743)

**077 334 6692**
**077 110 7624**




## மணமகள் தேவை

வெளிநாட்டில் வசிக்கும் டாக்டர் (MBBS) மணமகனுக்கு (19-26) வயது வரையுள்ள படித்த அழகிய மணமகள் தேவை. (12738)

Whatsapp/Viber
**004560675287**


## மரண அறிவித்தல்



## கந்தையா முருகையா

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வைரவப்புளியங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் நீலர்வளவு, தும்பளையைச் சேர்ந்த கந்தையா முருகையா அவர்கள் நேற்று *(10.09.2022)* சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் ஆனந்தநடராசா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயலட்சுமி (புனிதம்) அவர்களின் அன்புக் கணவரும் குமாரசாமி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியநாதன் அவர்களின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரி, சிதம்பரநடராசா, இரத்தினேஸ்வரி மற்றும் ஞானேஸ்வரி, சிவகுமாரன், சங்கரநாதன் காலஞ்சென்ற மகாலட்சுமி, கலாநிதி, நந்தகுமார், கனகசபை ஆகியோரின் அத்தானும் ஜெயவானி, ஜெயந்தன், பிரபாகரன் ஆகியோரின் சிறிய தந்தையும் சசீவன், ரஜீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வினிஜா, ஆதேஷ், பிரதீஷனா, ரோஹித் அனன்ஜா, நிதுஷ், ரக்சனா, பகலவன்.ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(11.09.2022)* ஞாயிற்றுக்கிழமை காலை *7.00* மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (நீலர்வளவு, தும்பளை, பருத்தித்துறை) நடைபெற்று பூதவுடல் கந்தனவெட்டியான் (கோரியடி) இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4896)

குடும்பத்தினர்


## கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

**கல்வி வளர்ச்சி அறக்கட்டளை - கிளிநொச்சி**

கிளிநொச்சியில் இயங்கிவரும் வலிந்துதவும் சமூக அமைப்பான எமது நிறுவனத்திற்கு கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

### தகைமைகள்

- HNDA பட்டம் பெற்றவராக இருத்தல் அல்லது க.பொ.த உயர்தரத்தில் வணிகப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்துள்ளதோடு குறித்த பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி கிளிநொச்சி மாவட்டத்தை வதிவிடமாக கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- சமூக சேவைகளில் ஈடுபாடும், மனிதநேயப்பணிகளில் விருப்புக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரி சுயமாக தயாரித்த விண்ணப்பப் படிவங்களை 25.09.2022 இற்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி,**

கல்வி வளர்ச்சி அறக்கட்டளை
இல. 80A, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

தகவல்
செயலாளர்,
கல்வி வளர்ச்சி அறக்கட்டளை,
கிளிநொச்சி.

(C-4892)

**077 722 8243, 021 228 0205**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிச்சோகை நோயால் பாதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள்

## பாராளுமன்றில் இம்ரான்கான் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**பொருளாதார நெருக்கடியால் கர்ப்பிணித் தாய்மார்கள் குருதிச்சோகை நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.**

போஷாக்கு குறைப்பாட்டினால் பாதிக்கப்படுகின்ற கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறுவர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

சிறுவர் மற்றும் தாய்மார்களுடைய குறை போசனை பிரேரணை தொடர்பிலான பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

போஷாக்கு குறைபாட்டின் காரணமாக தாய்மார்கள் குருதிச்சோகையினால் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான திரிபோஷா உணவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, திரிபோஷா வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கர்ப்பிணித் தாய்மார்கள், பிள்ளைகள் போசனை குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றமைக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும்.

மேலும் தற்போது பொருளாதார நெருக்கடியினால் கர்ப்பிணித் தாய்மார்கள் குருதிச் சோகை நோயினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பிள்ளைகளின் வளர்ச்சி வீதம் குறைவடைகிறது. இந்த நிலை குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் அதிகளவில் காணப்படுகிறது.

அதே போன்று கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இலவசமாக செய்யப்பட்ட குருதிப் பரிசோதனை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் தனியார் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

அத்துடன் குடும்பநல உத்தியோகத்தர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆகவே மேற்குறிப்பிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வு வழக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# நிறம் மாறியது கூகுள்

(லண்டன்)

பிரித்தானிய மகாராணியான 2 ஆம் எலிசபெத்திற்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக கூகுள் நிறுவனம் டூடுல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த டூடுல் வழக்கமாக காணப்படும் வானவில் நிறம் கொண்ட கூகுள் எழுத்துகளுக்கு பதிலாக, சாம்பல் நிறத்தில் அவை அமைந்துள்ளன.

தேடல் பட்டியின் கீழ் நினைவு மற்றும் துக்கத்தை அடையாளப்படுத்த ஒரு கறுப்பு ரிபன் இடப்பட்டுள்ளது. குறித்த ரிபன் பிரித்தானியாவிலுள்ள கூகுள் பயநர்களுக்கு மட்டும் தெரியும் வண்ணம் அமைந்துள்ளது.

பயநர்கள் சாம்பல் நிறத்திலான லோகோவைக் கிளிக் செய்தவுடன் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் தேடல் பக்கத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

மகாராணி பற்றிய தற்போதைய செய்திகள் , சிறந்த தேடல் வினவல்கள் மற்றும் ஒரு சிறு சுயசரிதை ஆகியவை இதில் அடங்கும். கூகுளின் தலைமை நிறைவேற்று அதிகாரி சுந்தர் பிச்சை டுவிட்டரில் மகாராணிக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அதில், "இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு பிரித்தானியா மற்றும் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என அவர் டுவிட் செய்துள்ளார்.

அவரது உறுதியான தலைமைத்துவமும் பொதுச்சேவையும் எங்கள் வாழ்நாளில் பலவற்றில் நிலையானது. அவரை நாம் இழந்துள்ளோம் என தெரிவித்துள்ளார். (நி)

# மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கூட்டணி நாமல்



(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கூட்டணி அமைக்கப்படும் என அவரது புதல்வர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அறிவித்தார்.

தெதிகமவில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூக ஊடகங்கள் ஊடாக வன்முறையை தூண்டுபவர்களுக்கு எதிராக கோட்டாபய ராஜபக்ஷ சட்டத்தை அமுல்படுத்தினால் இன்றைய நிலை வேறுவிதமாக இருந்திருக்கும்."

எவ்வாறாயினும், இந்த சவாலான காலகட்டத்தில் அவ்வாறானவர்களுக்கு எதிராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பது மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார்.

இலங்கையை நவீன யுகத்திற்கு அழைத்துச் செல்வதற்குத் தேவையான தலைமைத்துவத்தை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வழங்கும் என்றும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அதற்கான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கூட்டணியை உருவாக்கி, எதிர்காலத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவோம் என்றும் தெரிவித்தார். (நி)

# அதிகார இருப்பை தக்கவைக்க

# கருத்துச் சுதந்திரத்திற்கு தடை

## முன்னாள் சபாநாயகர் கரு



(கொழும்பு)

சுதந்திர, ஜனநாயக நாடொன்றில் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்குமான உரிமை என்பது இன்றியமையாததாகும்.

அவ்வாறிருக்கையில் அரசாங்கமொன்று அந்த உரிமையை மட்டுப்படுத்துமேயானால், அதன்மூலம் மக்களின் அபிலாஷைகளை விடுத்து வெறுமனே அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதை மாத்திரம் இலக்காகக்கொண்டு செயற்படுகின்ற ஆட்சியாளர்களின் தன்மையே வெளிப்படுகின்றது என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கருஜெயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இந்நாட்டு மக்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைதியான முறையில் செயற்பட்ட இளம் போராட்டக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகளை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவருமாறும் அவர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் தனியொரு குடும்பத்தின் ஆட்சிக்கு எதிராக நாட்டுமக்கள் முன்னெப்போதுமில்லாத வகையில் வீதிக்கு இறங்கி வெளிப்படுத்திய எதிர்ப்பின் மூலம் இவ்வாறான மக்கள்விரோத ஆட்சியை இனியொருபோதும் சகித்துக் கொள்ள முடியாது என்ற செய்தியே தெளிவாகக் கூறப்பட்டது.

அதே வேளை இந்நாட்டு மக்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைதியான முறையில் செயற்பட்ட இளம் போராட்டக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறைகளை உடனடியாக முடிவிற்குக்கொண்டு வருமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அவர்களின் பின்னால் பாரியதொரு சக்தியாகத் திகழ்கின்ற பொதுமக்களின் குரலுக்கு உரியவாறு செவிசாய்க்குமாறும் கோருகின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# கச்சா எண்ணெய் விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி அதிகரித்துள்ளது.

அதன்படி, பிரன்ட் கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை 91.79 டொலர்களாக பதிவாகியுள்ளது.

முந்தைய நாளுடன் ஒப்பிடுகையில் சுமார் 30 டொலர்கள் அதிகரிப்பை இது காட்டுகிறது. (நி)

# பாடநூல் அச்சிடுவதற்கான மூலப்பொருட்கள் இறக்குமதி

(கொழும்பு)

பாடநூல் அச்சிடுவதற்குத் தேவையான மூலப்பொருட்களை இந்திய கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளில் 30% உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்டு வழங்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மூடப்படுகிறது நோர்வே தூதரகம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள அந்நாட்டின் தூதரக வலையமைப்பு தொடர்பில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை மேற்கொள்ள நோர்வே அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக, கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் உட்பட ஐந்து நோர்வே தூதரகங்களை 2023 ஜூலை இறுதிக்குள் நிரந்தரமாக மூடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, ஐரோப்பாவிலும் அதற்கு அப்பாலும் உள்ள பல நோர்வே தூதரகங்களை வலுப்படுத்துவதை உள்ளடக்கியுள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து-தென்னாபிரிக்காவுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி மகாராணி மறைவால் ஒத்திவைப்பு

எலிசபெத் மகாராணியின் இழப்பால் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள துடுப்பாட்ட போட்டி ஒத்திவைக் கப்படுவதாக இங்கிலாந்து துடுப்பாட்ட வாரியம் அறிவித்துள்ளது.

உடல்நிலை மோசமானதை அடுத்து சிகிச்சை பெற்று வந்த மகாராணி இரண்டாம் எலிசபெத் தனது 96 ஆவது வயதில் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி அந்நாட்டுடன் ஒருநாள். இருபது-20. டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

அந்த வகையில் இரு நாடு களுக்கும் இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி கடந்த 8 ஆம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது. எனினும் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக இரத்து செய்யப்பட்ட நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் இடம்பெற இருந்தது.

இந்நிலையில். இங்கி லாந்து ராணி 2 ஆம் எலிசபெத் மரணம் அடைந்ததையடுத்து இன்று நடைபெறவிருந்த இங்கிலாந்திற்கும் தென்னாபிரிக்காவிற்கும் இடையிலான டெஸ்ட் போட்டியின் 2 ஆம் நாள் ஆட்டம் ஒத்திவைக் கப்படுவ தாக இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.


## சமையலாளர்கள் தேவை

வட்டுக்கோட்டையில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் Happpy Home Restaurant & Guest House இற்கு அனுபவம் வாய்ந்த சமையலாளர்கள் (Chef) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தகுதியானவர்கள் ஒரு கிழமைக்குள் தொடர்புகொள்ளவும்,

077 438 6508
077 912 3670
(12748)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் புடைவை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் வரலாம். பழக விரும்புபவர்களும் வரலாம். (12745)

077 879 9943

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் 1984 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. (12747)

077 732 3585
077 453 1364


## 24வது ஆண்டு நினைவு!



அமரர் பொன் சிவபாலன்
சட்டத்தரணி
(முன்னாள் யாழ்.மாநகர சபை முதல்வர்)



அமரர் க.பத்மநாதன் (A.O)
(நிர்வாக உத்தியோகத்தர்)



அமரர் பொ.பத்மராஜா



அமரர் மா.ஈஸ்வரம் (W.E)



அமரர் திருமதி மல்லிகா ராஜரட்ணம்

யாழ்.மாநகரப் போக்குவரத்து சம்பந்தமாக நடந்த உயர்மட்ட மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட அனைவரையும் நினைவுகூருவதுடன் இன்றுவரை பூர்த்தி செய்யப்படாத அந்தக் காரியம் எப்போது நிறைவுக்கு வரும் என ஏங்கும்

தங்க. முகுந்தன் (மூளாய்)
முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர்
077 727 9238

(C-4795)


## வேலை ஆட்கள் தேவை

சைவ உணவகம் இரண்டுக்கு வேலை ஆட்கள் தேவை. நிரந்தர வேலை, தங்குமிட வசதி கவர்ச்சியான புதிய சம்பளத்துடன்.


1. உணவு பரிமாறுபவர்கள்
2. குசினி வேலையாட்கள்
3. இடியப்பம் போடுபவர்
4. மரக்கறி வெட்டுபவர்
5. பிரதான சமையலாளர்
6. சுத்திகரிப்பாளர்
7. வடை போடுபவர்

(12744)

077 791 7753
077 191 5368


## மரண அறிவித்தல்

தோற்றம் 25 – 12 – 1948



மறைவு 09 – 09 – 2022

### முத்து பாலசுப்பிரமணியம்

( K.K.S சீமெந்து கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர் )

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து பாலசுப்பிரமணியம் அவர்கள் (09.09.2022) வெள்ளிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து - சுந்தரி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தம்பிஜயா - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரபாகரன், கமலன்(லக்ஸ்மி ஸ்ரோர்ஸ் K.K.S றோட் கொக்குவில்), பேசிலின் (ராஜன்-பெரிய கடை மார்க்கட்), சுமன் (Sarvodaya Development Finance), கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும். மஜீரன், லதீஸ்வரி (ஒஸ்மானியாக் கல்லூரி- ஆசிரியர்) அன்பு மாமனாரும் கரிஸனா, தர்ணியா, சஸ்விகன், தேர்ச்சிகன், கிருசோபன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (11.09.2022) நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 2.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


15/10 சேர்ச் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம். (12750)

077 978 9341
077 985 1217

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மலர்வு 1950 – 10 – 22



உதிர்வு 2022 – 09 – 08

### திரு. குழந்தைவேலு இராஜகுலேந்திரா

(சிரேஷ்ட சட்டத்தரணி)

பருத்தித்துறையைப் பூர்வீகமாகவும், பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட சட்டத்தரணியும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான திரு. குழந்தைவேலு ராஜகுலேந்திரா அவர்கள் (08.09.2022) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுகந்தி ராஜகுலேந்திரா (சட்டத்தரணி) அவர்களின் பாசமிகு கணவரும் கமலாதேவி காலஞ்சென்ற விஜேந்திரா (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற ராமநாதன்(சட்டத்தரணி), விமலாதேவி அவர்களின் மைத்துனரும் எழில்மொழி (சட்டத்தரணி) , சுபாங்கி (மீரா பாலர் பாடசாலை- ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆதிஷ், சஞ்ஜீவ் ஆகியோரின் அன்பு மாமனாரும் முருகுவளவன் , முகில்வெற்பன் ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (12.09.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இல.34/1, நெல்சன் இடம் வெள்ளவத்தை கொழும்பு 06 எனும் விலாசத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கல்கிஸை இந்து பொது மயானத்தில் பிற்பகல் 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 922 2100
077 844 9861
(12751)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு றோயல் கல்லூரிக்கு அருகில் தீ விபத்து



(கொழும்பு)

கொழும்பு றோயல் கல்லூரிக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

றோயல் கல்லூரி மாணவர் திறன் அபிவிருத்தி நிலையப்பகுதியிலே குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் தொடர்பில் தகவல்கள் வெளிவரவில்லை.

தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தீயினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (நி)

# ரயில் பயணச்சீட்டுகளுக்கு தட்டுப்பாடு

## ரயில்வே உதவிப் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

புகையிரதத் திணைக்களத்தில் பயணச்சீட்டுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு ஏற்ப பயணச்சீட்டு வழங்குவதில்லை என பயணிகள் சிலர் தெரிவித்தனர்.

இது குறித்து, ரயில்வே உதவிப் பொது முகாமையாளர் எஸ்.பொல்வத்த கூறுகையில், பயணச்சீட்டுகளை அச்சிடத் தேவையான காகிதம் இல்லாததே இதற்குக் காரணம் எனத் தெரிவித்தார். (நி)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்.

## அற்புதராஜா கலைவாணி

கடந்த (13.08.2022) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த அமரர். அற்புதராஜா கலைவாணி ஆகிய எங்கள் அன்புத்தாயின் மறைவுச் செய்தி அறிந்து எமது துயர் பகிர்வில் சகல வழிகளிலும் ஆறுதல் அளித்து இறுதிக்கிரியைகளிலும் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (12.09.2022) நாளை திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் வியாபாரி மூலை தெணியம்மன் கோவிலடி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று தொடர்ந்து பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

நன்றி (c-4894)

நா.மு.வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்

# பாணின் எடையைக் குறைத்து 190 ரூபாவுக்கு விற்க நடவடிக்கை

(கொழும்பு)

சில பேக்கரி உரிமையாளர்கள் 190 ரூபாவுக்கு நிர்ணயிக்கப்பட்ட எடைக்குக் குறைவான பாணை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

சில பேக்கரி உரிமையாளர்கள் ஒரு இறாத்தல் பாணின் எடையை 300 அல்லது 350 கிராம் வரை குறைத்து அந்த விலைக்கு விற்பனை செய்வதாகவும் அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். (நி)

# மரண அறிவித்தல்

## அமரர்.திருமதி. கலாராணி கெங்காதரன்



யாழ். மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட **கெங்காதரன் கலாராணி** அவர்கள் 08-09-2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்ற செல்லத்துரை, தனலஷ்மி தம்பதியரின் அன்பு மகளும் சரவணமுத்து செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கெங்காதரன் அவர்களின் பாசமிகு மனைவியும் மேகரன் (லண்டன்), கிருசாந்தன்(பிரான்ஸ்), மதுரா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜிதரன், கார்த்திகா, விசித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பத்மினி, மல்லிகாதேவி, அமிர்தலிங்கம், காலஞ்சென்ற விமலாதேவி, கணேசலிங்கம், வனஜாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்வராசா, தங்கராசா, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், விஜயகுமாரி, தர்மபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அன்ரியா, விகான், இனியா, சஸ்வின், கஸ்மீரா, ஜெனிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-09-2022 நாளை திங்கட்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் மட்டுவில் தெற்கு சாவகச் சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் குச்சப்பிட்டி இந்து மாயனத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**கெங்காதரன் (கணவர்)**
**077 844 6386**

**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

(12731)

# இராசிபலன்

11.09.2022
ஆவணி 26, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பிற்பகல் 3.08 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 10.26 மணிவரை
சுபநேரம் -9.03-10.33 மணிவரை
இராகுகாலம்- 4.33-6.03 மணிவரை
மஹாளய பஷாரம்பம்
சந்திராஷ்டமம் -மகம்

**வளவன்**




நண்பர்கள் கடைசி நேரத்தில் உதவி செய்வர்,தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்,அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல்நலன் சீராகும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கனிவாகப்பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சிகள் கைகூடும்.




பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வாகன சுகமுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.




பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வாகனப் பழுது செலவுகள் ஏற்படலாம், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.




தொலைதூரத்தில் உள்ள உறவினர்களின் வருகையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




நண்பர்களால் வளர்ச்சி கூடும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், வாக்கு மேன்மையுண்டு




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதியவர்களின் நட்பு கிடைக்கும்.

தான் என்ற அகந்தையிருக்குமிடத்தில் நிச்சயமாகக் குழப்பமிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் ஆரம்பம்




(குப்பிழான்)
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் இணைந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கும் ஊர்தி வழிக் கையெழுத்துப் போராட்டம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் சிதறு தேங்காய் உடைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த கையெழுத்து திரட்டும் போராட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஊர்தி வழியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதுடன் அதனைத் தொடர்ந்து 25 மாவட்டங்களிலும் தொடர்ந்தும் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினர் தெரிவித்தனர். (நி-18-33-104)

## 'சந்நிதியான் அற்புதங்கள்' நூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)
'சந்நிதியான் அற்புதங்கள் பாகம் பத்து' நூல் வெளியீடு நேற்று ஆலய முன்றலில் இடம்பெற்றது. ந.அரியரத்தினம் எழுதிய இந்நூலின் வெளியீட்டு விழா சிவசிறீ ஆ.சிவசண்முகஐயர் தலைமையில் இடம்பெற்றதுடன் ஆசியுரையை சிவசிறீ க. உலககுருநாத ஐயர் (பிரதமகுரு) வழங்கியதுடன் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்து ,கொண்டு நூல் வெளியீட்டையும் ஆரம்பித்து வைத்தார். (நி-104)

## வரணியில் உள்ள வீட்டிலிருந்து 8 பவுண் நகைகள் திருட்டு

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8 பவுண் நகைகள் திருடப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆபரணங்களை வீட்டின் அலுமாரியில் பூட்டி வைத்து விட்டு வெளியே சென்றபோது திருட்டு இடம் பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த திருட்டு தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-30)

## தொழில் முயற்சியாளர்களுக்கு யாழில் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(குப்பிழான்)
USAID நிறுவனத்தின் நிதி அனுசரணையில் தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழில் இடம்பெற்றது.

உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட ஐந்து தொழில் முயற்சியாளர்களுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனால் தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (நி-18)



யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் அம்புலனஸ் சேவை மாவட்ட அலுவலக மண்டபத்தில் நேற்று யாழ்.மக்களுக்கு ரஷ்ய புத்தகக் கண்காட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. (படம் -கஜிந்தன்)

## கெற்பேலியில் வெடிகுண்டுகள் மீட்பு



(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 26 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணியை உரிமையாளர் உழுத போது சில வெடிபொருட்கள் தென்பட்ட நிலையில் அது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினர் வெடிக்காத நிலையில் மண்ணில் புதைந்து காணப்பட்ட 26 கைக்குண்டுகளை மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

## யாழ். மாநகர முன்னாள் முதல்வர்
## பொன்.சிவபாலனின் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் பொன். சிவபாலனின் 24 ஆவது நினைவு தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சித்தங்கேணியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் இவருடன் பன்னிரெண்டு பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)



156 ஆவது பொலிஸ் தினத்தை கொண்டாடும் முகமாக அச்சுவேலி பொலிஸாரின் ஏற்பாட்டில் அச்சுவேலி வடக்கு கதிரொளி முன்பள்ளி சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றது. அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (படம்-மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 400
Viber 076 636 3378



# எலிசபேத் மகாராணி நினைவுக் குறிப்புகள்



இரண்டாம் எலிசபெத் மகாராணி மறைவுக்கு உலகத் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துவருகிறார்கள். 70 ஆண்டுகளுக்கு ராணியாக இருந்த இரண்டாம் எலிசபெத் குறித்த சுவாரஸ்யத் தகவல்களின் தொகுப்பு..!

**'ராணியின் பிறந்தநாள் எப்போது?'**

ராணி எலிசபெத் 1926 ஏப்ரல் 21ஆம் திகதி பிறந்தாலும் அவரின் பிறந்தநாள் ஜூன் மாதத்தின் முதல் அல்லது இரண்டாம் சனிக்கிழமைகளில்தான் கொண்டாடப்படுகிறது. குறிப்பிட்ட எந்த ஒரு திகதியும் அறிவிக்கப்படுவதில்லை. ஆக, ராணியின் பிறந்தநாள் என்று எந்த ஒரு குறிப்பிட்ட திகதியும் கலண்டரில் இல்லை. ஒவ்வோர் ஆண்டும் அந்நாட்டு அரசுதான் ராணியின் பிறந்தநாளை அறிவிக்கும். அதன்படியே கொண்டாட்டங்கள் அமையும்.

**வீட்டிலேயே கல்வி..!**

அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மற்றவர்களைப் போல் பள்ளிக்கூடங்கள் செல்வதில்லை. இதனால் குழுவாக மற்ற மாணவ, மாணவிகளுடன் கல்வி கற்கும் அனுபவம் அவர்களுக்குக் கிட்டவில்லை. ராணி எலிசபெத்தும் அப்படியே. அவருக்கும் அவரின் தங்கை மார்கரெட்டுக்கும் வீட்டிலேயே கல்வி கற்பிக்கப் பட்டது.

**பல்குரலில் பேசும் வல்லமை**

ராணி இரண்டாம் எலிசபெத் எப்போதும் எந்த ஒரு உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் முகத்தைத் தீவிரமாக வைத்துக்கொள்ளும் நபராக அறியப்பட்டாலும் அவரை நன்கு அறிந்தவர்கள் அவரை அதிகம் நகைச்சுவை உணர்வுகொண்டவராக அறிவர். அவர் வேடிக்கையாகப் பேசுவதிலும் மிமிக்கிரி செய்யும் திறமையும்கொண்டவர். கேண்டெர்பரியின் முன்னாள் பேராயர் அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில், "அவர் மிகவும் நகைச்சுவை உணர்வுமிக்கவராக இருப்பார்" என்றும் "அவரின் இந்தக் குணம் பலர் அறிந்ததில்லை" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

**செல்லப்பிராணிகள்!**

ராணி இரண்டாம் எலிசபெத்துக்கு செல்லப் பிராணிகள் என்றால் அலாதிப் பிரியம். குறிப்பாக கார்கி வகை நாய். இளவரசி டயானா முன்னர் இது குறித்துக் குறிப்பிடுகையில், "செல்லப்பிராணிகள் ராணியின் நகரும் சிவப்புக் கம்பளங்களை போன்றவை. ஏனென்றால் அவை அவர் செல்லும் எல்லா இடங்களுக்கும் கூடவே செல்லும் காரணத்தால்" என்கிறார்.

**'சொந்த வருமானத்துக்கு வரி செலுத்துகிறேன்!'**

இரண்டாம் எலிசபெத் ராணியாகவே இருந்தாலும், குறைந்தபட்சம் 1992 ஆம் ஆண்டிலிருந்து வரிகளைச் செலுத்தி வருகிறார் என்பது தகவல். 1992 இல் ராணியின் வார இறுதி இல்லமான விண்ட்சர் கோட்டை தீயினால் நாசமானபோது, அதைப் பழுது பார்ப்பதற்காக மில்லியன் கணக்கான பவுண்டுகள் செலுத்துவதற்கு எதிராக பொதுமக்கள் கடுமையான போராட்டங்களை முன்னெடுத்தனர். அப்போது அவர் தனது தனிப்பட்ட வருமானத்துக்கு வரி செலுத்த தானாக முன்வந்து ஒப்புக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அடம்பிடித்து பெற்ற ஓட்டுநர் பயிற்சி!**

எலிசபெத் எப்போதும் மக்களுக்காக தனது பங்களிப்பைத் தர ஏதாவது செய்துகொண்டேயிருப்பார். இரண்டாம் உலகப்போர் சமயங்களில் தன்னுடைய பெற்றோர்களிடம் போராடி ஓட்டுநர் பயிற்சி பெற்றார். இதன் மூலம் அம்புலன்ஸ் மற்றும் லொறி ஓட்டும் பயிற்சியையும் பெற்றார். சில மாதங்களில் அவர் ஜூனியர் கமாண்டர் ஆகும் வாய்ப்பையும் பெற்றார். இப்படி அவர் வாழ்நாளில் நடந்த சுவாரஸ்யமான சம்பவங்கள் பல. பிரிட்டன் வரலாற்றில் நீண்டகாலம் ஆட்சி புரிந்த ராணி எலிசபெத் அமைதியான முறையில் விடைபெற்றார்

**நீண்ட நாட்கள் ஆட்சி செய்து சாதனை!**

1926 ஏப்ரல் 21 இல் பிறந்த ராணி எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி, 1952 இல் அரியணை ஏறினார். ராணி எலிசபெத் அசைக்க முடியாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அதிக ஆண்டுகள் ஆட்சி செய்தவர். எழுபது ஆண்டுகள் ஆட்சி செய்ததன் மூலம் 63 ஆண்டுகள் ஆட்சி செய்த ராணி விக்டோரியாவின் சாதனையை முறியடித்திருக்கிறார்:

# தமிழினத்திற்கு நீதி கிடைக்குமா?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் நாளை ஆரம்பமாக உள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான இலங்கையின் குழு ஜெனிவாவில் முகாமிட்டுள்ளது.

குறித்த குழுவில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இறுதி யுத்தத்தில் வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த கொடும் யுத்தத்தில் போர் குற்ற மீறல்கள் நடந்தன என சர்வதேசம் பலமான ஆதாரங்களுடன் நிரூபித்திருந்தாலும் அதை இலங்கை ஆட்சியாளர்கள் மறுத்து வருகின்றனர்.

குறித்த போர்க்குற்ற மீறலை பெரும்பாண்மையின படையினர் மேற்கொண்டதாலேயே அவர்கள் அதை மூடி மறைக்க முயற்சிக்கின்றார்கள் என்பதும் உண்மை.

அவ்வாறெனில் பாதிக்கப்பட்ட சிறுபாண்மை தமிழினமும் இந்த நாட்டின் குடிமக்களே என்பதை ஆட்சியாளர்கள் நினைக்கவில்லை என்பதே பொருள்.

தவிர ஆட்சி அதிகாரம் முழுவதும் எம்மிடம் உண்டு. நாம் எதைத் திணிக்கின்றோமோ அதையே இந்த நாட்டில் வாழும் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்பதே அவர்களின் மனநிலையும்.

போர்க்குற்ற மீறலை மேற்கொண்டவர்களை தண்டிக்கவோ விசாரணை செய்யவோ முன்வராத . ஆட்சியாளர்கள் அவர்கள் தப்பேதும் செய்யாதவர்கள் என சான்றிதழ் வழங்குவதில் முனைப்புக் காட்டுகின்றனர்.

நாளை நடைபெறவுள்ள ஐ.நாவின் கூட்டத் தொடரில் பங்கு கொள்ளவுள்ள இலங்கைக் குழுவின் தலைவரும் வெளிவிவகார அமைச்சருமான அலி சப்ரி சர்வதேச விசாரணை என்பதை இலங்கை ஒருபோதும் ஏற்காது எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்களாக இருந்திருந்தால் வெளிவிவகார அமைச்சர் அவ்வாறனதொரு கருத்தைக் கூறியிருப்பாரா என்பதை நாம் நோக்க வேண்டும்.

தமிழினத்தை தவிர்த்து ஆட்சியாளர்களுடன் தொடர்ந்து இணைந்திருக்கும் முஸ்லிம்கள் தமிழினம் தொடர்பில் வைத்திருக்கும் மனநிலையின் வெளிபாடோ இது என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஜெனிவாவில் கால் பதித்தவுடன் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கூறிய கருத்து தமிழ் மக்களை மனம் நோக வைத்துள்ளது.



அதாவது இலங்கையில் மனித உரிமை மீறல் எவையும் நடைபெறவில்லை மீறி சர்வதேசம் சர்வதேச விசாரணையை இலங்கை மீது திணிக்குமாக இருந்தால் அதை இலங்கை அரசு ஒருபோதும் ஏற்காது. ஒருவேளை சில படையினர் தவறு செய்திருந்தால் நாம் விசாரணை செய்வோம். அதைவிடுத்து சர்வதேசத்திற்கு ஒருபோதும் இலங்கையில் தலையிட அனுமதி இல்லை என தெரிவித்திருந்தார்.

போர் நிறைவுற்று 13 ஆண்டுகள் கடந்து விட்டது. இந்த 13 ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு நியாயம் பிறக்க எதையாவது இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்டனரா?

தவறு செய்த படையினரை பாதுகாக்க முனைந்தவர்கள் அவர்களை விசாரணை செய்து தண்டனை வழங்குவார்களா? அவ்வாறு விசாரணை செய்தால் அந்த விசாரணை நம்பகத் தன்மையாக இருக்குமா? இதுவே ஒட்டுமொத்த தமிழினத்தின் கேள்வியும். பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு தீங்கிழைத்தவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட வேண்டும்.

அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். இதை சர்வதேசத்தினூடே செய்ய வேண்டும். இதுவே தமிழினத்தின் விருப்பு.

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடிமாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் அம்மையார் காலமாகி விட்டார். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**மூப்பர்:** வாத்தியார், கடந்த 08.09.2022 ஆம் திகதி வலம்புரி ஆசிரியர் தலையங்கத்தில தெரு நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எழுதப் பட்டிருந்தது. அது தொடர்பில உள்ளூராட்சி அமைப்புக்கள் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கிறதா இருக்குதோ?

**விதானையார்:** தெரு நாய்களைக் கட்டுப்படுத்துகிற விடயத்தில உள்ளூராட்சி அமைப்புக்கள் மிகப்பெரிய அசமந்தப் போக்கைக் கொண்டுள்ளன. யாராவது ஒரு பிரதேச சபை அல்லது மாநகர சபை இது விடயத்தில களத்தில இறங்கினால், தெருநாய்களைப் பிடித்து அவற்றை நாய்கள் காப்பகத்தில் ஒப்படைத்தால் அதனைத் தொடர்ந்து ஏனைய பிரதேச சபைகளும் தெருநாய்களைக் கட்டுப்படுத்துகிற நடவடிக்கையில ஈடுபடுவினம் எண்டு நம்புறன்.

**விதானையார்:** மகிந்த சிந்தனையைக் காட்டி தெருநாய்களைக் கட்டுப்படுத்தாமலே விடுவதால் ஏற்படுகிற பிரச்சினையை உள்ளூராட்சி அமைப்புக்கள் உணர்ந்து கொள்வதாக இல்லை.

**கங்காணி:** அதெண்டால் உண்மைதான். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா அவர்கள் தெரிவித்த தகவல் ஒன்றில்; ஒரு வருடத்தில தெருநாய்க் கடிக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில சுமார் 6000 பேர் சிகிச்சை பெறுகினம் என்று தெரிவித்துள்ளார்.

இதைவிட, விசர் நாய்க் கடியால் ஏற்படும் மரணம், நாயுடன் விபத்துக்குள்ளாகி இறப்பவர்கள் மற்றும் படுகாயமடைபவர்கள் என இன்னொரு தொகையும் இருக்குது.

இந்த நிலையில தெரு நாய்களைக் கட்டுப்படுத்துகிற விடயத்தில உள்ளூராட்சி அமைப்புக்கள் காட்டுகிற அசமந்தம் ஏன் எண்டு தான் புரியாமல் இருக்குது.

**சாத்திரியார்:** என்னைப் பொறுத்த வரை இரண்டு விடயங்களை உள்ளூராட்சி சபைகள் செய்யுமாக இருந்தால், அந்தந்தப் பிரதேசங்களில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும்

**மூப்பர்:** சாத்திரியார், நீங்கள் சொல்லுகிற இரண்டு விடயங்களும் என்ன என்பதையும் சொல்லுங்களன்.

**சாத்திரியார்:** ஒண்டு இந்தத் தெருநாய்களை அறவே இல்லாமல் செய்வது. இதற்காக தெரு நாய்களைப் பிடித்து நாய்கள் காப்பகத்தில் சேர்க்க வேண்டும். அதே நேரம் நாய் வளர்ப்பவர்களைப் பதிவு செய்வதும் பெண் நாய்களுக்குக் கருத்தடை ஊசி போடுவதையும் செய்ய வேணும்.



## பாடசாலை மாணவர்களுக்கு போதையைப் பழக்கும் கொடுமை

நாய் வளர்ப்பவர்கள் பொறுப்பற்றவர்களாக இருக்கிறதாலதான் இவ்வளவு நாய்கள் தெருவுக்கு வந்திருக்கு.

ஆகையால, நாய் வளர்ப்பவர்களுக்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்க வேணும். இல்லையெண்டால் திரும்பத் திரும்ப தெருநாய்ப் பிரச்சினை இருந்து கொண்டே இருக்கும்.

இவ்வாறு கூறிய சாத்திரியார் சற்று அமைதியடைய அவசரப்பட்ட மூப்பர் கையோட இரண்டாவது விடயத்தையும் சொல்லுங்களன் சாத்திரியார் என்றார்.

**சாத்திரியார்:** இரண்டாவது விடயம் குப்பைகளை தெருக்களில கொட்டுறதை முற்றாகத் தடுக்க வேண்டும். தங்கட வீட்டுக் குப்பைகளை தெருக்களில கொண்டு வந்து கொட்டுகிறவர்களின்ர மனநிலையை ஒருக்கா சிந்தித்துப் பாருங்களன்.

இப்படியான மனிதர்கள் இருக்கும் வரை தமிழினத்திற்கு என்னெண்டு விடிவு கிடைக்கும்.

**பண்டிதர்:** சாத்திரியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. வீட்டுக் குப்பைகளையும் பம்பஸ் கழிவுகளையும் வீதியில கொண்டு வந்து போட, தெருநாய்கள் அவற்றைத் தரம்பிரித்து அந்த இடமெல்லாம் பரப்பி விடுகுது.

இதை முழுமையாகத் தடுக்காத வரை, எங்கட பிரதேசத்தை சுத்தமான இடமாக ஒருபோதும் வைத்திருக்க முடியாது.

**சிறாப்பர்:** முந்தின காலத்தில வீட்டுக் குப்பைகளைச் சேர்த்து வைத்து வயலுக்கு இயற்கைப் பசளையாகப் போடுகிற ஒரு முறை இருந்தது.

இப்ப ஆரு குப்பை சேர்க்கினம். ஆரு வயலுக்குப் போடுகினம். வயல் விதைக்கிறதிலேயே ஆர்வம் இல்லாத போது... குப்பைகளைச் சேர்த்து வயலுக்குப் போடுகிற நடைமுறை இனி எங்க வரப்போகுது.

**வாத்தியார்:** சிறாப்பர் அப்படி சொல்லாதீங்க. இனிவரும் காலத்தில எல்லாரும் நெல் விதைக்க வேணும். குப்பைகளை வீட்டில சேர்த்து வைத்து அதனை வயலுக்குப் போடுகிறதை ஊக்குவிக்க வேணும். ஆனாலும் ஒண்டு. சேர்த்த குப்பைகளை ஏற்றி வயலுக்குப் போடுகிற ஒரு புதிய நடைமுறையை ஒரு குறிப்பிட்ட கட்டணத்தோட யாழ்ப்பாண மாநகர சபையும் பிரதேச சபையும் செய்தால், அது பெரிய உதவியாக இருக்கும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் அதனை ஆமோதித்த விதானையார் விசுவலிங்கம் இதனை ஒரு தீர்மானம்ாக நிறைவேற்ற வேணும் என்று கூற, அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு ஆலடியில் அமைதி நிலவ அந்த அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** இப்ப மாணவர்கள் மத்தியில போதை வஸ்துப் பாவனையை ஏற்படுத்துகின்ற முயற்சிகள் கடுமையாக நடக்குதாம். இதனைத் தடுத்து நிறுத்தாவிட்டால் எங்கட இளம் சந்ததியைக் காப்பாற்ற முடியாமல் போகும்.

**சாத்திரியார்:** உண்மைதான். அண்மையில வடமராட்சிப் பகுதியில உள்ள ஒரு பாடசாலை மாணவர்களுக்கு சோடாக்குள்ள போதைப் பொருளைக் கலந்து கொடுத்திருக்கினமாம். சோடா எண்டு நினைச்சுக் குடித்த மாணவர்கள் வாந்தி எடுத்து மயங்கி விழுந்து பெரும் அல்லோலப்பட்டிருக்கினம்.


**விதானையார்:** அது தான்... அது தான்... போதைவஸ்துப் பாவனை தொடர்பில பாடசாலை நிர்வாகங்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேணும்.

இல்லையெண்டால், போதைப் பாவனையில இருந்து எங்கட் சமுதாயத்தைக் காப்பாற்ற முடியாமல் போகும்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையை பௌத்த நாடு என்று எவ்வாறு கூறமுடியும் சொல்லுங்கள் வியாசரே?






ஐ.நாவில் இலங்கையின் கழுத்து நெருக்கப்படும் என்கிறார்களே உண்மையா?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ஐ.நாவில் இலங்கையின் கழுத்து நெருக்கப்படும் என்கிறார்களே உண்மையா?**

இத்துடன் எத்தனை முறை இப்படிக் கூறி விட்டார்கள். ஆனால் எதுவும் நடந்தபாடே இல்லை.

ஆரம்பத்தில் சொன்ன போது இலங்கையின் கழுத்து நெருக்கப்பட்டிருந்தால் இன்று 12 ஆவது திவசம் செய்யும் நிலையில் அது இருந்திருக்கும்.

என்ன செய்ய ஆட்சி, அதிகாரம் யாரிடம் இருக்கிறதோ அவர்களே கொடும் பாவத்தை செய்திருக்கிறார்கள்.

அவர்களிடம் இருந்து எப்படி பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு நிதி கிடைத்துவிடும்?

**சுதன் — குப்பிழான்**

**தமிழரசுக் கட்சி தனி வழியில் சென்றால் தமிழர்களுக்கு விடிவு கிடைக்குமா வியாசரே?**

என் வழி தனி வழி என்று சொன்ன ரஜினி காந்திற்குப் பின் ஆயிரம் ஆயிரம் மக்கள் கூட்டம் நின்றது. அது திரைப்படம்.

கூட்டை உடைத்து எம் வழி தனி வழி என தனித்துச் சென்றால் கூட நிற்கும் மக்கள் உங்களுடன் நிற்க மாட்டார்கள் என்பதே உண்மையானது.

எருமைகள் ஒற்றுமையாக இருந்தால் மட் டுமே சிங்கத்தை எதிர்க்க முடியும் என பாலர் வகுப்பில் படித்த ஞாபகம்.

அது இவர்களுக்கும் நினைவில் இருக்கும் என்று நம்புவோமாக.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**இதழினி — புலோலி**

**சின்னச் சின்னச் சண்டைகள் வந்தாலும் எம்முடன் அன்பாய் இருக்கும் சொந்தங்கள் பற்றி....?**

அவ்வாறான சொந்தங்கள் இருந்தால் அந்த வாழ்க்கை சொர்க்கத்தைப் போன்றது.

ஆனால் எமது வாழ்வில் தான் அவ்வாறானவர்களை கண்டுவிட முடியாதே. வேண்டுமென்றால் இரவு துங்கும் போது கனவு காண மட்டும் உரிமையுண்டு.

அவ்வளவுக்கு சுயநலம் படைத்தவர்கள் மத்தியிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

உறவுகளில் நமக்கு நல்லது நடக்க மட்டும் நினைக்கும் ஒரே ஒரு ஜீவன் தாய் மட்டும் தான். அதை விட வேறு எவரும் அந்த இடத்தை நிரப்பி விட முடியாது.

**சிவம் — வதிரி**

**போதைப் பழக்கம் வட பகுதியை பற்றிப் பிடித்து விட்டது போல உள்ளதே?**

போதைப் பயன்பாடு என்பது இப்போது ஒருவித நாகரிகம் ஆகி விட்டது என்பதே உண்மையானது.

போதைப் பாவனை இல்லாதவர் யாரும் இருப்பாராக இருந்தால் அவரை மற்றவர் ஒருவித ஏளனத்துடன் பார்க்கும் நிலையே இப்போதைய நிலை.

அந்தளவிற்கு போதைப் பாவனை கௌரவமானது என்ற மனநிலையை விதைத்து விட்டது.

எம் இனத்தை கருவறுக்க நினைப்பவர்கள் மிகத் தெளிவாக திட்டம் தீட்டி அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நுனியை கைபிடித்துக் கொண்டு சென்றால் நிச்சயம் அடியைக் கண்டு பிடிக்கலாம்.

ஆனால் அது அவ்வளவு சுலபம் ஆனதும் அல்ல.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தவநாத் — மானிப்பாய்**

**அவசரப்பட்டு வார்த்தையை விட்டு விட்டு அதன் பின் கவலைப்பட்டு பயன் ஏதும் உண்டா மாமா?**

கொடும் வார்த்தைகளைக் கொட்டும் பலருக்கு அதன் தாக்கம் புரிவதே இல்லை.

நாவினால் சுட்டு விட்டு அதை ஆற்ற எந்த மருந்தை உபயோகித்தாலும் அது நிவாரணத்தைத் தராது.

மற்றவர்களின் மனம் நோகும் படி பேசுவதைத் தவிர்த்து அன்பால் சில உதாரணங்களைக் கூறி குறித்த தவறை சரி செய்ய முயற்சித்தால் பலன் நூறாக இருக்கும்.

இல்லையேல் வார்த்தைகள் அன்பாய் வீழ்ந்தாலும் மனதிற்குள் வடு இருந்து கொண்டே இருக்கும்.

**மதுவன் — மீசாலை**

**சமூகத்தில் நன்மை செய்தவனை வெறுக்கும் நபர்களைப்பற்றி கூறமுடியுமா?**

காய்க்கும் மரமே கல் எறி வாங்கும் என்று ஒரு பழமொழி உண்டு.

இவர்கள் நிலவைப்பார்த்து குரைக்கும் நாய் போன்றவர்கள். இவர்களின் குரைப்பால் அந்த நிலவுக்கு எதுவும் நடந்து விடப் போவதில்லை.

இவர்களை ஒரு பொருட்டாக எடுக்காமல் நாம் எமது நேர்வழியில் செல்வதே நன்று.

எம்மை நல்லவர் என்று நிரூபிக்க ஆரம்பிப்போமாக இருந்தால் எமது பிரதான வேலையை விட்டு விட்டு இதன்மீதே கவனம் செலுத்த வேண்டி வரும்.

ஆதலால் இறைவனிடம் பாரத்தைக் கொடுத்து விட்டு முன்னோக்கிச் செல்வோம்.

**விஜயரட்ணம் — யாழ்ப்பாணம்**

**இலங்கையை பௌத்த நாடு என்று எவ்வாறு கூறமுடியும் சொல்லுங்கள் வியாசரே?**

ஆட்சி மொழி பௌத்த் சிங்கள மொழி என்பதால், சிறுபான்மை இனங்களால் எப்பாடுபட்டாலும் ஆட்சி அதிகாரத்தில் இருக்க முடியாது என்பதால்,

இலங்கையின் எப்பாகத்தைத் தோண்டினாலும் பௌத்த சின்னங்களே வெளிவருகின்றன என்ற அறிவிப்பினால், அரச மரம் நிற்கும் இடமெல்லாம் பௌத்த சின்னம் சூட்டுவதால், ஆட்சி அதிகாரத்திற்கு யார் வரினும் பௌத்த பீடங்களை சந்தித்து அவர்கள் சொற்படி நடப்பதால்,

சிவராத்திரியன்று மதுபானச் சாலைகள் திறப்பதும் போயா தினங்களில் மதுபான சாலை மூடப்படுவதும்.

இவ்வாறு பல காரணங்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

**தவசிவர்ணன் — யாழ்ப்பாணம்**

**நல்லூர் முருகனுக்கும் சந்நிதி கந்தனுக்கும் இம்முறை தூக்குக் காவடி கள் ஏராளமாக வந்ததைக் காண முடிந்ததே?**

கொரோனாத் தொற்றுக்காரணமாக கடந்த வருடங்களில் பலர் நேர்த்திக்கடனை நிறைவேற்ற முடியவில்லை. அதன் விளைவே இது.

தூக்குக் காவடிகள் வீதியால் செல்லும் போது தேங்காய் உடைத்துச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

அந்தத் தேங்காய்ச் சிரட்டைகளை அப்புறப்படுததாமல் அப்படியே வீதியில் விட்டுச் செல்வதால் தேங்காய் சிரட்டை ஓடுகள் வாகனங்களின் சில்லில் குத்திவிட வாய்ப்புண்டு.

அத்துடன் உடைக்கப்பட்ட தேங்காய்களை மிதித்துச் செல்வதற்கும் சங்கடம் ஏற்படலாம்.

எனவே நேர்த்திக்கடன் செய்கிறவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துவது சாலச்சிறந்தது. அந்த தேங்காய்களை ஒரு உரபாக்கில் எடுத்து நேர்த்திக்கடன் முடிக்கும் கோவிலில் சேர்ப்பித்தால் அது எவ்வளவு பிரயோசனமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : ஜானி
இயற்றியவர் : கங்கை அமரன்
இசை : இளையராஜா
பாடியவர் : எஸ்.ஜானகி



காற்றில் எந்தன் கீதம்
காணாத ஒன்றை தேடுதே

காற்றில் எந்தன் கீதம்
காணாத ஒன்றை தேடுதே

அலைபோல நினைவாக
சில்லென்று வீசும் மாலை நேர

காற்றில் எந்தன் கீதம்
காணாத ஒன்றை தேடுதே

எங்கெங்கும் இன்பம் அது கோலம் போட
என்னுள்ளே ஒரு வீணை ராகம் தேட
அன்புள்ள நெஞ்சை காணாதோ
ஆனந்த ராகம் பாடாதோ
கண்கள் எங்கும் நெஞ்சின்
பாவம் மேலும் ஏற்றும்

காற்றில் எந்தன் கீதம்
காணாத ஒன்றை தேடுதே

நில்லென்று சொன்னால் மனம் நின்றால்
போதும்
நீங்காத நெஞ்சில் அலை ஓய்ந்தால் போதும்
மௌனத்தின் ராகம் கேளாதோ
மௌனத்தில் தாளம் போடாதோ
வாழும் காலம் யாவும்
இங்கே நெஞ்சம் தேடும்

காற்றில் எந்தன் கீதம்
காணாத ஒன்றை தேடுதே

அலைபோல நினைவாக
சில்லென்று வீசும் மாலை நேர

காற்றில் எந்தன் கீதம்
காணாத ஒன்றை தேடுதே

# ரணிலின் தந்திரம் ஐ.நாவில் பலிக்குமா?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் நாளை 12 ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந் நிலையில் இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் காட்டமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தண்டனை விலக்கல் கலாசாரமே இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வளவு காலமும் இறுதிக்கட்ட போரின் போது இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாகவே ஐ.நா அறிக்கையே காலம் காலமாக வெளியிடப்பட்ட நிலையில்,

மனித உரிமை மீறல்கள் பொருளாதா குற்றங்கள் மற்றும் ஊழல்கள் என்பவற்றுக்கான தண்டனை விலக்கு கலாசாரமே இலங்கையின் இன்றைய பெரும் நெருக்கடி காரணம் என தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகள் தண்டனை இன்றி தப்பிப்பதே இலங்கையின் நெருக்கடிக்கு மூல காரணம் என வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணை வேண்டும் என்று வழமை போல கூட்டமைப்பும் ஐ.நா அறிக்கையை ஆதரித்துள்ளது.

சர்வகட்சி அரசுக்கு அழைப்பு விடுத் துள்ள ஜனாதிபதி ரணி லின் வியூகம் ஐ.நா வில் எப்படி செல்லுபடியாகப் போகின்றது என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


ரணில் ஒரு பழமையான அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி ஒரே ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்துக் கொண்டும் இலங்கையின் ஜனா திபதியாகியுள்ளார்.

தனது பதவியையும் ஆட்சி அதிகாரத்தையும் எப்படி தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவருக்கு நன்கு தெரியும்.

இராஜதந்திர வியூகம் என்ற பெயரில் அனைவரையும் வெட்டி ஆளும் வல்லமை ரணிலிடம் நிறையவே உண்டு.

ராஜபக்ஷவுக்கு எதிராக தென்னிலங்கையில் ஒரு பாரிய புரட்சியே ஏற்பட்டது. முன்னாள் ஜனாதிபதி கோட்டா யாருக்கும் தெரியாமல் நாட்டை விட்டு ஓடும் நிலைமை ஏற்பட்டது.

போர் வெற்றி நாயகன் என்று தென்னிலங்கை மக்களால் போற்றப்பட்டவர் கடைசியில் அவர்களாலேயே அடித்து துரத்தப்படும் நிலைக்கு தள்ளப்பட்டார்.



பொருளாதார நெருக்கடி கடுமையாக மக்களை வாட்டி வதைத்த நிலையில் மக்கள் அந்த முடிவுக்கு தாமகவே தள்ளப்பட்டனர்.

ஆனால் இலங்கையில் தற்போதும் பொருளாதார நெருக்கடி தொடர்கின்றது. மக்கள் அன்று செய்ததை போன்ற புரட்சிகரமான எழுச்சிப் போராட்டம் எதனையும் இனிச் செய்யவில்லை. இதற்கு முழுமையாக விதை இட்டவர் ஜனாதிபதி ரணில் என்பதில் மாற்று கருத்தே இல்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி போரட்டகாரர்களின் தொடர்ச்சியான கைதுகள் மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சிப் போரட்டம் மழுங்கடிக்கப் பட்டுள்ளது.

ராஜபக்ஷக்களை காப்பாற்றியதோடு கோட்டாவையும் ரணில் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வந்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றார்.

இந் நிலையில் ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக கடுமையான தீர்மானங்கள் எடுக்கப் படவுள்ளன.

மேற்குலக நாடுகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று ஏற்கனவே ஐ.நா கோரியிருந்தது.

யுவான் வாங் 5 சீனாவின் ஆய்வுக் கப்பல் விவகாரத்தில் ஏற்கனவே இந்தியாவை பகைத்த நிலையில் சீனாவும் கைவிட்டால் இலங்கையின் நிலை படுமோசமாகும். ரணிலின் தந்திரம் இம்முறை ஐ.நாவில் பலிக்குமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**க.மதீசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

அவனால் நியாயம் செய்ய முடியவில்லை. ஆனால், எல்லாவற்றையும் மீறியவனாகத் தன்னை ஓரிரு இரவில் உற்பத்தி செய்திருக்கிறான்.

"அடுத்த கிழமை இன்டர்வியூவில என்ன சொல்லுறது எண்டு தான் எனக்கு இப்ப குழப்பமாயிருக்கு அண்ணே."

செய்து தொலைக்காமல், என்னுடன் பேசுவதற்கு முடிவெடுத்தது, அவனுக்குள் முகிழ்ந்திருந்த நிதானமாகப்பட்டது.

இருந்தாலும், அவனது பேச்சும், அதில் தெரிந்த களைப்பும் அவனில் சிறு அச்சத்தையும் காண்பித்தன.

உண்மையைச் சொல்லப் போனால் - அன்று அவனை நான் யாதது எதுவுமில்லை என்றுதான் எப்போதும் நினைத்தேன். அவன் நினைத்தால், இங்குள்ள அதிகாரிகள் அனைவரையும் வெள்ளவத்தை பொலிஸ் போல உச்சிக் கொண்டு தப்பிவிடலாம் என்று நினைத்தேன்.

ஆனால், அவனுக்குள் அவனை சகல திசைகளிலும் உருக்குலைத்தபடியிருந்த புதிய பரிணாமத்தி

கடல்களை வென்று வந்தவன், ஒரு சிறு அறையில் இருளின் மடியில் வாழ்க்கையின் பொல்லாப் பாதங்களில் நசிந்துபோனான்.

அடுத்த நாள் காலை வேலைக்குச் சென்றேன்.

மெல்லிய வெயிலை விலக்கிக் கொண்டு எனது கார் முகாம் வீதிக்குள் திரும்பியது. அசாதாரணமாக நான்கைந்து பொலிஸ் வாகனங்கள் முகாமின் வெளியிலுள்ள யூகலிப் டஸ் மரங்களுக்குக் கீழ் வரிசையில் நின்றன.

அவுஸ்திரேலியக் குடிவரவு அமைச்சின் இலச்சினை பதித்த வாகனங்கள் இரண்டும் கூட அங்கு நின்று கொண்டிருந்தன. அவை முதல் நாளிரவு பெரிய சம்பவமொன்று முகாமில் இடம்

**நீதன் எனக்கு எப்போதுமே ஒரு புலனாய்வுப் போராளி. நான் கோழை போல விட்டு வந்த எனது தேசத்தை மீட்பதற்கு, ஆயுதத்தோடு அலைந்து திரிந்தவன். சாவை ஒரு சக தோழனாக நேசித்தவன். அவனது அருகாமை எப்போதும் எனக்குள் பெரு விருட்சமாகத் தெரிந்தது.**

## வலி சொல்லும் தொடர்... 47

ராதாவை ஏற்றுக்கொண்டு வெளியே போவதற்கு வழியிருக்கிறது என்றால், நீதன் ஏன் தேவையில்லாமல் தனது ஆயுதப் போராட்ட வரலாற்றை புலனாய்வுத்துறையிலிருந்த கதைகளை - அவுஸ்திரேலியப் புலனாய்வுப் பிரிவினரிடம் கொட்டிவைக்க வேண்டும்? சிலவேளை, அது ராதா சொன்ன வழிகளுக்கு நிரந்தரமாகக் குழி தோண்டிவிடும்.

நீதன் முன்பொரு தடவை முகாமிலிருந்த வெறுப்பின் உச்சத்தில் பிளேட்டினால் தன் கைகளைக் கீறிய காயங்கள் சாதுவாக வெளியே தெரிந்தன.

அது காய்ந்துபோயிருந்தாலும் ஆபத்தான காயங்கள். அது எனக்குத் தெரியவந்து, உடனே முறைப்பாடு செய்ய வேண்டும், இது எப்போது நடந்தது என்று மிரட்டிய போது, என் கைகளைப் பிடித்துக் கெஞ்சி, யாரிடமும் சொல்ல வேண்டாம், அது ஒரு நாள் மனைவியின் நினைவில் கிழித்துக்கொண்டது என்று என்னைத் தடுத்துவிட்டான்.

"இனிமேல் செய்ய மாட்டேன்" என்று தனது பிள்ளைமேல் சத்தியம் செய்திருந்தான். என் தொழில் விதிகளை மீறி அவனைப் பற்றி குடிவரவு அமைச்சில் முறைப்பாடு செய்து கொள்ளாமல் தவிர்த்த தருணம் அது.

இன்று இவ்வளவு பெரிய மனக் குழப்பங்களிலும், நீதன் முன்பு போல முட்டாள்தனமாக ஏதாவது சற்றுக் கூடுதலாகத் தெரிந்துகொள்ள முயன்றிருக்க வேண்டும்.

அத்தனை நாட்கள் பேசிய கண்களின் ஊடாக அவனை இன்னும் கூடுதலாகப் படித்திருக்க வேண்டும்.

இரண்டொரு கேள்விகளை அதிகம் கேட்டிருக்க வேண்டும்.


நிதானமாக இன்னொரு தேநீரைப் போட்டுக் கொடுத்திருக்க வேண்டும்.

கணனியில் கிடந்த அனீஸாவினதும் லியோவினதும் படங்களைப் பிரதியெடுத்து அவனுக்குக் காண்பித்து அவனது மனதில் சிறு சலனத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஒரு பெரும் கடலின் வன்மத்தை மீறி வந்த அவனது வாழ்வின் திமிரை, மீண்டும் அவனுக்கு எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும்.

ஆனால் "எதற்கும் யோசிக்காதே" என்று முட்டாள்போல அவனுக்கு ஆறுதல் சொன்னேன். நான் விட்ட மிகப்பெரிய தவறு அது.

நீதன் எனக்கு எப்போதுமே ஒரு புலனாய்வுப் போராளி. நான் கோழை போல விட்டு வந்த எனது தேசத்தை மீட்பதற்கு, ஆயுதத்தோடு அலைந்து திரிந்தவன். சாவை ஒரு சக தோழனாக நேசித்தவன். அவனது அருகாமை எப்போதும் எனக்குள் பெரு விருட்சமாகத் தெரிந்தது. அவனது உரையாடல்கள் விழுதுகளாக என்னுள் அலைந்தன. அவனால் முடி




லான போரினை நான் மதிப்பிடவில்லை. ஆயுதமற்ற போரில் அவன் மிகவும் பலவீனமானவன் என்பதை உணர்ந்திருக்கவில்லை.

நான் ஊற்றிக்கொடுத்த தேநீரும் உறுதிமொழிகளும் அவனுக்குள் புதிய நம்பிக்கைகள் வேர்விடுவதற்கு இடம் கொடுத்திருக்கும் என்றுதான் விடைகொடுத்தேன். அவனது கைகளில் அன்றுணர்ந்த இளஞ்சூடு, அவனுக்குள் எரிந்துகொண்டிருந்த இறுதி நெருப்பு என்று நான் அறியவில்லை.

அன்றிரவு நான் பணி முடித்து வீடு சென்றிருந்தவேளை நீதன் தனது அறையில் மாரடைப்பில் இறந்துபோனான்.

தனது தேசத்துக்காகவும், தனது குடும்பத்துக்காகவும் முழுவீச்சாக ஒவ்வொரு கணமும் அவன் மூச்சிழுத்தபோது, விரிந்து விரிந்து கொடுத்த இதயம், அன்றிரவு ஏனோ காற்று நிரப்ப மறுத்தது. நரம்புகளில் பாய்ந்த [illegible] மூளையை முற்றாக மறந்தது. எத்தனையோ எதிரிகளை, பெரும் கண்டங்களை,

பெற்றிருப்பதற்கான அபசகுனங்களை அவிழ்த்து வைத்திருந்தன.

ஆனால், அது ஆச்சர்யமில்லை. முகாமில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் நாட்களிலெல்லாம், ஏதாவதொரு பதற்றத்தை இங்கு எதிர்பார்க்கலாம். கூரையில் ஏறி நின்று ஆர்ப்பாட்டம் செய்வார்கள், சவரம் செய்யும் பிளேடை எடுத்துக் கையை அறுத்துக்கொள்வார்கள், அறையைப் பூட்டிவிட்டு 'விசா தந்தால்தான் வெளியில் வருவேன்' என்பார்கள் 'இமிக்ரேஷனைக் கூப்பிட்டால்தான் கழுத்திலிருந்து கயிற்றைக் கழற்றுவேன்' என்பார்கள்.

இவ்வாறு வெவ்வேறு நாட்டவர்கள் முகாமுக்குள் வருகின்ற போதெல்லாம், அவர்களது போராட்ட வடிவங்களும் வித்தியாசமானவையாக இந்தக் கம்பிவேலிகளுக்குள் எமக்குப் புதிர்போட்டிருக்கின்றன. என்று எனக்கு முதல் பணிபுரிந்த முகாம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கூறியிருக்கிறார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளம் சேர்க்கலாம்

அநியாயம் அரகோச்சும்
மதிகெட்ட காலத்தில்
விதி வந்து விளையாடும்
கதியற்ற மனிதர்க்கு
விதி கூறும் பொது நீதி
அழிவுக்கு வழிகாட்டும்

அறிவுக்கு வாழ்வுண்டு
குறி வைத்து வழி காணின்
தறி கெட்டுப் போகாது காண்
தெரியாத கதை கூறி
அரிதான வழி காட்டும்
புதுமைகள் பூச்சூட்டுமே!

புகழ் கண்டு மனம் நிறையும்
நிகழ்வோடு பலம் இணையின்
அறி வோங்கும் நிலை சேருமே
எதிருக்கு எதிராக
எவர் வந்து நின்றாலும்
அரிதான வளம் சேரும்
நிறைபேறு உருவாகும்
விதி கூட வந்து வழிகாட்டும்

விதியோடு விளையாடும்
மதியற்ற மனிதர்க்கு
பதிவாழ்வு தவறாகலாம்
ஓதி உணரும்
உணர்வோடு சேரும்
நிதி கொண்டு
வளம் சேர்க்கலாம்
புதிதான பலம் கூட்டலாம்.

**வளவை வளவன்**

## பயணம்

இந்தப் பாதைதான்
எந்தையும் தாயும்
உலவித் திரிந்தது..
என் பயணமும் அங்கேதான்
ஆரம்பமானது..

பாதைகள் கிளை பிரிய,
பாதங்கள் தொடர
திரும்ப முடியாதபடி,
காலம் கதவடைத்துக் கொள்கிறது..

பயணங்களில் தவறவிட்ட
சில பாதைகளைத் தேட
காலம் கைகொடுக்கவில்லை..

நிலையற்ற காலத்தின்
நியாயத்தின் உண்மை
நிரூபிக்கப்படும் போது
யாவும் நிறைவு பெற்றுவிடுகிறது..

நிறைந்தும் வழிந்தும்
நகரும் வாழ்க்கை
உறைந்து விடுகிறது..

வாழ்வின் விளிம்பில்
மரணத்தின் சரிவில்
யாவும் அடங்கும்
ஒரு நிசப்தத்தில்
இந்த ரூபத்தை உதறி
அரூபம் வெல்லும்
அந்தக் கணத்தில்
வெளியேறி விடுகிறோம்
வாழ்க்கையிலிருந்து
அவ்வளவுதான்...

**சங்கரி சிவகணேசன்**

## அந்திமத்தை நோக்கி நாம்

அன்பான மானிடனே!
நானுங்கள் இயற்கைத் தாய் பேசுகிறேன்
அனலாய் கொதித்த பூமியை
குளிர்மைப்படுத்தி தட்ப வெப்பம்
சமநிலையாக்கி சுவாசக் காற்றையும்
சுத்தமாய் தழுவச் செய்தேன்
பச்சைப்பசேல் புல்வெளிகளையும்
கண்ணைக் கவரும் பூஞ்செடிகளையும்
பயன்கள் பல தரும் தாவரங்களையும்
ஓங்கி வளரும் பெரு விருட்சங்களையும்
புவியிலே பரவச் செய்தேன்
நீயும் விந்தை மிகு படைப்புகளை
உருவாக்கிய போது
அகம் மிக மகிழ்வுற்றேன்.
ஆனால் மறு பக்கத்தால் நீ
வஞ்சகம், சூது,போட்டி, பொறாமை,
பழிக்குப்பழி, அதிகார வெறி, பேராசை என
இன்னும் எத்தனையோ துர்க்குணங்களை
உன் மனதில் வளர்த்துக் கொண்டாயே.
அதனால் சண்டை சச்சரவுகள்
யுத்தங்கள் எனக்கு எதிரான
செயற்பாடுகள், கண்டு பிடிப்புக்கள்...
ஐயகோ! உயிர்ப் பல்வகைமைக்கே
ஆபத்தாகி விட்டதே!
உயிர்ப் பல்வகைமைக்கு ஆபத்தென்றால்
உனக்கும் தானே ஆபத்து
அந்திம காலத்தை நீயாகவே
வரவழைக்கிறாய்.

**சி.இ.அன்புதுரை**
**சம்மட்டியோலை,மானிப்பாய்.**

## மௌனத்தின் தேடல்- 574




## ஏக்கம்

முதியோர் இல்லத்தில்
நடைப்பிணமாக
வாழும் எனக்கு:
இந்தப் படத்தை
பார்த்ததும் இதை
பிரசுரித்தவனை:
திட்டத்தான் முடிந்தது.

**பி.மதுஷ்சன்**
**தையிட்டி**

## மௌனத்தின் தேடல்- 575



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## சாகாதிருக்க

பாசம் தேடும் பாலகர்களுக்கு
பரிவுடன் நெறிப்படுத்தும்
பாட்டன் பாட்டிகள்
கிடைக்குமானால்
மரணிக்கும் மனித நேயம்
உயிர்ப்புடன் வாழ்வதற்கு
உதவிக்கரமாய் அமையக்கூடும்.

***சி.இ.அன்புதுரை,***
***சம்மட்டியோலை,மானிப்பாய்.***

## பேரனின் முத்தம்

உடல் தளர்ந்து விட்டது
தலையும் நரைத்தும் போனது
வாழ்க்கையின் இறுதிப் பயணம்
எப்போது எனக் காத்திருக்க
செல்லப் பேரனின் முத்தம்
கன்னத்தில் பதிந்ததால்
முகத்தில் என்னே பூரிப்பு!

**பிரமன் ,கொக்குவில்.**

## ஊட்டச்சத்திதோ

அன்பு கருணை அள்ளி வழங்கும்
ஆசைப் பாட்டிக்கு பேரன் ஆசையோடு
இன்ப ஊற்றை அணைத்துக் கொடுக்க
தன்னை மறந்து களிப்பை உணர்ந்த
கனிவுப் பாட்டிக்கு இன்னும் இனும்
காலம் நூறு ஆண்டுகள் காணும் வகை
உயிர் ஊட்டச்சத்து தான்
இந்த பேரனாமே.

**[illegible], கொக்குவில்.**

## அரவணைப்பு

கதை சொல்லும் பாட்டி நீ
கண்ணை இமை காப்பது போல் காப்பவள்
அன்புக்கு இலக்கணமானவள்
ஆதரித்து அரவணைக்கும் அம்மம்மா
கால் மீதும் தோள் மீதும் தாலாட்டுவாய்
ஊண் உறக்கம் இன்றி உணவு ஊட்டுவாய்
பாசாங்கு இல்லா பாசக்காரி நீ
பாலர் மனதில் நேசக்காரி

**கும்பவாழியான், உடுப்பிட்டி.**

## விடுமுறை

விடுமுறை வந்ததும் பேரனைக் கண்டதும்
பதுக்கி வைத்திருந்த பாசம் எல்லாம்
பாட்டி முகத்திலே தெரிந்தது மறுபடி
காத்திருந்தாள் பெற்றவனின்
வரவிற்காக அல்ல; பேரனின் முத்தத்திற்காக.

**பிரகவி, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா
# புது நகரம்

**காலத்தின் பதிவு 31**

அதைக் கண்ட கூட்டம் வெறிபிடித்துப் பலவிதமாகக் கூச்சலிட்டது. அந்தக் கூச்சலையும் மக்களின் வெறியையும் கண்ட இளையபல்லவன் பலவர்மனுக்கும் மஞ்சளழகிக்கும் அந்த மக்கள் மேல் எத்தனை பலத்த பிடிப்பு இருக்கிறதென்பதையும் உணர்ந்து கொண்டதன்றி, பலவர்மனின் செல்வாக்கை அழிக்க வேண்டுமென்றால் தனது முழுத்திறனும் முழுத்தந்திரமும் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அறிந்து கொண்டான்.

அடுத்த சில விநாடிகளில் பலவர்மனும் மஞ்சளழகியும் நடன மண்டபத்தை நெருங்கிப் புரவிகளை விட்டு இறங்கினர். பலவர்மனைக் கண்டதும் கூட்டம் ஒருமுறை எழுந்து உட்கார்ந்து. காவலர் புடைசூழ வந்த பலவர்மன் அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி வணங்கிவிட்டுத் தனக்கெனப் போடப்பட்டிருந்த தனி ஆசனத்தில் அமர்ந்தான்.

மஞ்சளழகி நடன-மண்டபத்தின் பக்கச் சீலைக்குள் சென்று மறைந்தாள். அதுதான் கூட்டத்துக்குள் தான் நுழைய வேண்டிய சமயமென்று தீர்மானித்த இளைபல்லவன் தன் உபதலைவர்களுடன் அந்தக் கூட்டத்தை நேர்க்கிச் சென்றான்.

அவன் அணிந்திருந்த ராஜ உடையையும் நடந்த தோரணையையும், அவனைப் பின்பற்றி வந்த உபதலைவர்களின் பார்வைகளையும் கண்டு என்ன செய்வதென்று அறியாமல் திக்பிரமை பிடித்துக் கொண்டு நின்று விட்ட காவலர் வரிசையைப் பிளந்து கொண்டு உள்ளே சென்ற இளையபல்லவன், தன் உபதலைவர்களை முன்னிலையில் உட்கார வைத்துத் தான் மட்டும் பலவர்மனுக்கு அருகில் சென்று தலைவணங்கி, "சொன்னபடி வந்துவிட்டேன்." என்றான். பலவர்மன் பதில் ஏதும் சொல்லவில்லை. அவனைப் பலதரப்பட்ட உணர்ச்சிகள் ஆட்டி அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

இளையபல்லன் உள்ளே நுழைந்ததுமே கூட்டத்தில் மீண்டும் ஆரவாரம் கிளம்பியதைப் பலவர்மன் கவனித்தான் கொள்ளையடிக்கும் மாலுமிகள். "வருக! வருக!" எனக் காவி மொழியில் கூச்சலிட்டு அவனை வரவேற்றார்கள்.

கொள்ளைக்கூட்ட மாதர்கள் அவன் தங்களுக்கு அளித்த பட்டாடைகளை விசிறிக் காட்டியும் கொண்டை ஆபரணங்களைத் தொட்டுக் காட்டியும் ஆனந்தக் கூச்சலிட்டார்கள்.

இவற்றையெல்லாம் பலவர்மன் கவனித்தான். ஒரே பகலுக்குள் இளையபல்லவன் எப்படி இந்தக் கொள்ளையரை வசப்படுத்தினான் என்று எண்ணினான்.

ஏதும் புரியாததால் இளையபல்லவனைச் சந்தேகம் நிரம்பிய கண்களுடன் நோக்கினான். இன்னும் சில விநாடிகள் கழித்திருந்தால் இருவரும் அதைப்பற்றிப் பேசியிருப்பார்கள். ஆனால் அங்கு நேரமில்லை. திடீரெனப் பின்னணி வாத்தியக்காரர்கள் மேடை மீது தோன்றினார்கள். இன்பமான ஸ்வர ஜாலங்கள் எழுந்தன. சூழ்நிலை திடீரென மாறிவிட்டது. கூட்டம் மூச்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந் திருந்தது. இளையபல்லவன் கண்களையும் காதுகளையும் தீட்டிக் கொண்டான். அடுத்த விநாடி மண்டப மேடை மீது பறந்து வந்தாள் மஞ்சளழகி சதங்கை ஒலித்தது. கிண்கிணி முரன்று பாடியது. கடற்கரை தேவலோகமாக மாறியது. (தொடரும்)

---


# உலகின் தொழில் திறன் அதிசயங்கள் பகுதி -2

1956 இல் வெளியான எட்கர் ஜேக்கப் எழுதிய காமிக்ஸ் புத்தகமான தி எல்லோ எம் இல் லண்டன் கழிவுநீர் கால்வாய்தான் முக்கிய களம். 1996 ஆம் ஆண்டு நீல்கெயில்மென்னின் நாவலான நெவெர் வேர் இன் மூலம் இதற்கு இலக்கியத்தில் முக்கிய இடம் கிடைத்தது.

அதற்குப் பிறகு 2000 த்தில் மிக்கெல் ரோபோத்தம்ஸ் எழுதிய தி லாஸ்ட் 2005 இல் கிளேர் கிளார்க் எழுதியதி கிரேட் ஸ்டிங்க் 2006 ஆம் ஆண்டு ஆன்னி பெர்ரி எழுதிய டார்க் அஸாசின் 2012 இல் ஆரோன் விட்ச் எழுதிய விஸ்பர் அண்டர்கிரௌண்ட் ஆகிய நாவல்களில் பிரதான பாத்திரமாக லண்டன் கழிவு நீரகற்று அமைப்பு திகழ்கிறது. கழிவுதான் என்றாலும் அதையும் பிரமிக்கும் விதத்தில் அமைக்க மனிதனால் முடியும் என்பதற்கு லண்டன் நகரக் கழிவு நீரகற்றும் அமைப்பு நிரூபிக்கிறது.

**எஸ்.எஸ். கிரேட் ஈஸ்டர்ன் கப்பல்**

உலகின் மிகச்சிறந்த திறன் மிக்க பொறியாளர் என்று சொல்லப்படும் இஸம்பார்ட் கிங்க்டம் புருனெல் என்பவர் இங்கிலாந்து போக்குவரத்துத் துறையில் மாபெரும் புரட்சி செய்தவர். மெக்கானிக்கல் மற்றும் சிவில் ஆகிய இரு துறைகளிலும் கரை கண்டவர் என்று வியக்கப்பட்ட புருனெல் இங்கிலாந்தின் தரை வழி, கடல் வழி, இருப்புப் பாதை போக்குவரத்துக்களில் குறிப்பிட்டத்தக்க பொறியியல் பணிகளில் மகத்தான பங்களித்தவர்.



இங்கிலாந்தின் கிரேட் வெஸ்டர்ன் ரெயில்வே அமைக்கப்படும்போதும், கிளிஃப்டன் சஸ்பென்ஷன் பாலம் கட்டுமானப் பணியின் போதும் பிரதான பொறுப்பில் இருந்து அவற்றைத் திறம்படச் செய்தவர் புருனெல். அவரது நீண்ட நாள் கனவு ஒரு மிகப்பெரிய கப்பலை நிர்மாணித்து அதில் அதிகப்படியான பயணிகளையும் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு திரும்பவும் எரிபொருள் நிரப்ப வேண்டிய அவசியமின்றி உலகம் முழுமைக்கும் சுற்ற வேண்டும் என்பதுதான். அவரது கனவில் முதல் முயற்சிதான் எஸ்.எஸ். கிரேட் ஈஸ்டர்ன் கப்பல். இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய தேசங்களுக்கும் ஒரே சமயத்தில் கிளம்பி எரிபொருளை வழியில் நிரப்பும் அவசியம் இல்லாது திரும்பவும் இங்கிலாந்து வரவேண்டும் என்கிற திட்டத்தோடு 1858 இல் உருவாக்கப்பட்டது எஸ். எஸ். கிரேட் ஈஸ்டர்ன் கப்பல். சுமார் 4000 பேர் பயணிக்கும் அளவு 211 மீற்றர் நீளமுடையதாக கட்டப்பட்டது எஸ்.எஸ். கிரேட் ஈஸ்டர்ன் கப்பல். கப்பலின் மொத்த எடை 18915 தொன். அன்றைய தினம் அதுதான் மிக நீளமான மற்றும் அதிக எடையுடைய கப்பல். அதற்குப் பிறகு 1899 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆர்.எம்.எஸ்.ஓஷியானிக் கப்பல் 215 மீற்றர் நீளம் உடையது.

1901 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஆர்.எம்.எஸ். செல்டிக் கப்பல் 21,035 தொன் எடை கொண்டது. இருப்பினும் இப்படியான மகா பிரம்மாண்ட கப்பல் கட்டுவதற்கான முதல் அடித்தளம் எஸ்.எஸ். கிரேட் ஈஸ்டர்ன் கப்பல்தான் என்பதால் இன்றளவும் அதுதான் சாதனைக்குரிய பொறியியல் முயற்சி எனக் கருதப்படுகிறது. அளவில் மிகப்பெரியதாக வடிவமைக்கப்பட்ட முதல் கப் பல் என்கிற சாதனையை விட அதிகம் சோதனைகளை இன்னல்களை சந்தித்த கப்பல் என்கிற பெருமையும் இதற்கு உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

307

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## வேக நடை



ஆரோக்கியமான ஒவ்வொரு வரும் 30 நிமிடங்கள் வேக நடையை உடற்பயிற்சியாக செய்து வருவார்களாயின் அவர் கள் பல தொற்றா .நோய்களி லிருந்து பாதுகாப்பு பெறுவர்.


வேகநடை என்பது பொதுவாக 5 கிலோமீற்றர் / மணி என்ற வேகத்தில் நடப்பது என்று வரைவிலக்கணப்படுத்தப்படு கிறது. 30 நிமிடங்கள் 5 கிலோ மீற்றர் / மணி என்ற வேகத்தில் நடப்போமாயின் எம்மால்' 2.5 கிலோமீற்றர் தூரம் நடக்க முடியும்.

சராசரியாக நிமிடத்திற்கு 110 அடிகள் எடுத்துவைப்போமாக இருந்தால் மேற்குறிப்பிட்ட வேக த்தை எம்மால் பேண முடியும்.

நேரம் போதாமல் இருக்கு மாயின் இதனை 15 , 15 நிமிடங் களாகவும் பிரித்துக்கொள்ள லாம்.

இந்த வேகநடையை அமைதி யான இயற்கையான சூழலில் செய்வோமாயின் அது மனஅமை திக்கும் உறுதுணையாக அமை யும்.

## மண்ணிற சீனியால் வந்த மயக்கம்



மண்ணிற சீனியை பலரும் அருமருந்தாக நினைத்துப் பயன் படுத்த ஆரம்பித்திருப்பது அவ தானிக்கப்பட்டு வருகிறது. நீரிழிவு நிலை உள்ளவர்கள் கூட மண் ணிற சீனி பாதுகாப்பானது என நம்பி பயன்படுத்த ஆரம்பித்திருக் கிறார்கள்.

இது மருத்துவத்துறையின ருக்கு ஒரு பெரும் சவாலாக உரு வெடுத்து வருகிறது. மண்ணிறச் சீனியிலே வெள்ளைச்சீனியிலும் பார்க்க சில ஊட்டச்சத்துக்கள் சற்று அதிகமாகவே காணப்படுகிறது என்ற ஒரு விடயத்தை மூலதன மாக்கி விளம்பரப்படுத்தி அதிக விலையில் இந்த மண்ணிற சீனி விற்பனையாகி வருகிறது.

அடிப்படையில், மண்ணிறச் சீனியும் வெள்ளைச் சீனியை ஒத்ததே. நிறை அதிகரிப்பு, நீரி ழிவு என்பனவற்றை ஏற்படுத்த வல்லது. நீரிழிவு நிலை, அதி கரித்த உடல் நிறை போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் உள் ளவர்கள் மண்ணிற சீனியை யும் தவிர்த்து விடுவது முக்கியமா னதாகும். மண்ணிற சீனி உடலு க்கு நல்லது என்ற மயக்க நிலை யிலிருந்து நாம் விடுபட வேண் டும்.

Dr . சி.சிவன்சுதன்
பொதுவைத்திய நிபுணர்

## தூக்கத்தை கெடுப்பதில் வெளிச்சத்தின் பங்கு

மின்சார விளக்குகளின் நீலநிறம் அதிகமாக இருக்கும் வெளிச்சமும் டேப்லட் எனப்படும் தொடுதிரை கணினி மற்றும் ஸ்மார்ட் போன் எனப்படும் தொடுதிரை செல்பேசிகளின் திரைகளில் இருந்து வெளியாகும் நீலம் கலந்த வெண்மையான வெளிச்சம் மனிதக்கண் களில் தொடர்ந்து மணிக்கணக்கில் படும் போது அதனால் கண்களின் தூக்கம் மிகப் பெரிய அளவில் இடையூறு செய்யப்படுவதாக கூறுகிறார்கள் விஞ்ஞானிகள்.

அதன் விளைவாக மேற்குலக நாடுகளில் பள்ளிக்கூடம் செல்லும் பதின்ம வயது மாணவர் கள் கூட தங்களின் தாத்தா பாட்டிகளின் தூக்க மாத்திரைகளை சாப்பிடும் சம்பவங்களெல் லாம் நடப்பதாகவும் இந்த விஞ்ஞானிகள் கவலையுடன் சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிறார்கள்.

இப்படி முறையான, போதுமான தூக்க மில்லாமல் இருப்பதன் காரணமாக இதயநோய், நீரிழிவு நோய், உடல் பருமன், தொற்று நோய்கள் மட்டுமல்ல புற்றுநோய்கூட ஏற் படலாம் என்றும் இந்த விஞ்ஞானிகள் எச்ச ரித்திருக்கிறார்கள்.

எனவே மாலை நேரத்தில் தொடுதிரை கணினி அல்லது தொடுதிரை செல்லிட பேசித்திரைகளில் மணிக்கணக்கில் பார்க்கும் பழக்கத்தையும் வீடுகளின் மின் விளக்குகளில் கூடுதல் நீலநிற வெண்மையை வெளியிடும் விளக்கு வெளிச்சத்தில் இருப்பதை தவிர் க்கும்படியும் விஞ்ஞானிகள் யோசனை தெரி வித்திருக்கிறார்கள்.


நித்திலம்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த அரசாங்கத்திலும் தொடரும் ஊழல் மோசடிகள்

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐந்து பேரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தது 62 ஆயிரத்து 220 ரூபாய் தேவைப்படுவதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர அறிக்கையை மேற்கோளிட்டு பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

ஆனால், இன்று நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மாதாந்தம் ஊதியம் பெறுபவர்களில் 70 வீதமானோர் 62 ஆயிரத்திற்கும் குறைவான சம்பளமே பெறுகிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வறுமை தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கை நிலைமை மோசமடைந்துள்ள நிலையில் போஷாக்குக் குறைபாடு தொடர்பான யுனிசெப் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் வாதிடுவது சரியானதா என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்த அரசாங்கத்தின் கீழ் ஊழல் மோசடிகள் தொடர்வதாக சுட்டிக்காட்டிய எரான் விக்கிரமரத்ன, சேதனைப் பசளை இறக்குமதி என்ற போர்வையில் நாடு 7.6 மில்லியன் டொலர்களை இழந்துள்ளது என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (நி)

# கேகாலையில் கோர விபத்து 3 பேர் உயிரிழப்பு



(கேகாலை)

கேகாலை-ரணவலப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு -கண்டி பிரதான வீதியில் வான் ஒன்றுடன் 3 மோட்டார் சைக்கிள்கள் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மேலும் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)

# ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு அவசர கடனுதவி

(கொழும்பு)

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உணவு கிடைப்பதை உறுதி செய்யவும் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 203 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவசர உதவிக் கடனாக வழங்குகிறது. இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து அவசரகால கடன் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் போது ஆசியா மற்றும் பசுபிக் நிதியம், திட்ட நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குகிறது.

இந்த நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாகவே வழங்கப்படவுள்ளது. (நி)

# காலநிலை மாற்றம் காரணமாக இலங்கைக்கு படையெடுக்கும் பறவைகள்

(திருமலை)

திருகோணமலை மஹதிவுல்வெவ குளத்தில் புதிய வகை ஒரே இனத்தைச் சேர்ந்த பறவைகள் அதிகளவில் நடமாடுவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

காலநிலை மாற்றத்தினால் இந்த பறவைகள் வருகை தந்திருக்கலாம் என பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர். இக்குளத்தில் தற்போது சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில் ஒரே இனத்தைச் சேர்ந்த பறவைகள் சுற்றித் திரிவதனால் பார்ப்பதற்கும் அழகாக அக்குளம் காட்சியளிக்கிறது.

இந்த நாரை வகை பறவைகள் வெளிநாடுகளிலிருந்து காலநிலை மாற்றம் காரணமாக இலங்கைக்கு படையெடுத்து வந்திருப்பதாகவும், சுமார் ஆறு மாதங்கள் வரை இவை இங்கு வாழ்ந்து தங்கி நிற்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: சூரி 1 செவ் 4 இல் உயரம்: 172 cm<br>தகைமை/தொழில் BSc Probationary Lecturer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி வேலை<br>தொ.இ: B/12924 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 84 சூரி 1 செவ் 12 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் விவாகரத்தானவர் பதிவுத்திருமணம் மட்டும்<br>தொ.இ:G/12928 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 28 சூரி, செவ் 9 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc (Hons) QS<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி வெளிநாடாயின் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/12925 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 37 ¼ சூரி, செவ் 2 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L HNDA இறுதி யாண்டு மாணவி<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/12933 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 39 சூரி, செவ் 2 இல் உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12929 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2 உயரம் : 5'5"<br>கி.பா: 61 சூரி 11 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: BSc ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ:G/12935 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம் : கேட்டை 1<br>கி.பா:50 சூரி 8 செவ் 9 இல் உயரம்:6'<br>தகைமை/தொழில்:BSc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச தனியார் தொழில்<br>தொ.இ: B/12930 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: சூரி 10 செவ் 9 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில் : Food Production Management (BSc)<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் பொறியியலாளர்<br>தொ.இ:G/12936 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்



## ஜெயக்குமார் திருமண சேவை

1972 விவாகரத்தான ஜேர்மன் மணமகனுக்கு மணமகள் (திருமணமான ஒரு பிள்ளை என்றாலும்) தேவை. 1986 ஜேர்மன் (Doctor) படித்த மணமகனுக்கு மணமகள் தேவை (பட்டதாரி பெண்) மற்றும் உங்கள் தகுதிக்கு ஏற்ப மணமகன் மணமகள் உண்டு.
தொடர்பு -077 023 7639
Whatsapp- 009417643399372, 0094764752219
Viber- 0094767338071 (12734)



## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

### திருமதி. சுபத்திராதேவி சிவகணேசன்
(B.Com, Dip in Edu) (பிரதி அதிபர்)




சேவை விபரம் (11.09.2022)

நு/பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி
(20.01.1989-01.05.1999)
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் தேசிய பாடசாலை
(02.05.1999-19.01.2003)
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
(20.01.2003-19.01.2014)
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
(20.01.2014-10.09.2022)

கல்வி உலகிற்கோர் கலங்கரை விளக்காய் திகழ்ந்தவரே
பள்ளிதனில் ஆலமரமாய் விழுதுகள் பரப்பி பணியாற்றியவரே
மணிவிழா காணும் நாயகியே வழியனுப்பி வைக்கின்றோம்
காலத்தின் கட்டாயத்தால்
எங்கிருந்தாலும் எல்லா வளமும் பெற்று இன்புற்று வாழ
உளமார வாழ்த்துகின்றோம் உங்கள் பிள்ளைகளாய்

வாழ்த்துவோர்
ஆசிரியர், பணியாளர் நலன்புரிச்சங்கம்
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை

(C-4889)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைகள் செய்து கொள்ளும் வீதம் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரிப்பு

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**(கண்டாவளை)**

**கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சம் பேருக்கு 34 பேர் என்ற அடிப்படையில் தற்கொலைகள் நடைபெறுவதாக கடந்த ஆய்வுகளில் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். போதனா மருத்துவமனையின் உளநல மருத்துவர் சிவதாஸ் தெரிவித்துள்ளார்.**

உலக தற்கொலை தடுப்புத் தின நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்கொலை வீதம் அதிகரித்து காணப்படுகின்றது தற்கொலை தொடர்பில் தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி ஒரு இலட்சம் பேருக்கு 14 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர்

ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சம் பேருக்கு 34 பேர் தற்கொலை செய்து கொள்ளும் நிலை காணப்படுகின்றது அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் குடும்ப வன்முறைகள் ஐம்பது வீதமாக அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாது சிறுவயது கர்ப்பங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

இந்த தற்கொலைகளில் இளம் வயதினரே அதிகம் ஈடுபடுகின்றனர். தனிமை, மற்றவர்களிடமிருந்து விலகி இருத்தல், உறவுகளுடனான முரண்பாடு, போதைப்பொருள் மதுபான பாவனை, துஷ்பிரயோகங்கள், மனநோய், பொருளாதார நெருக்கடிகள், வேலைவாய்ப்பின்மை போன்றவை தற்கொலைகளுக்கான காரணங்களாக அமைகின்றன. (நி-315)

## கௌரவமான அரசியல் தீர்வு கோரி தலைமன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம்

(மன்னார்)

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப்பொருளில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெற உள்ள செயற்றிட்டத்தின் 41 ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை தலைமன்னார்ப் பகுதியில் இடம்பெற்றது.




குறித்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகள் ,விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள். (நி-285)

## மாகாண பளுதூக்கல் போட்டியில் தங்கம் வென்ற சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

(வவுனியா)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவபிரகாசப் பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ள பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பளுதூக்கும் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி தங்கப் பதக்கத்தை தமதாக்கி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

கந்தர்மடம் சைவப்பிரகாச பாடசாலையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பளுதூக்கும் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியை சேர்ந்த மாணவி கு.குலவிழி 59 கிலோ எடைப்பிரிவில் 72 கிலோ தூக்கி 1 ஆம் இடத்தை பெற்றுள்ளார். (நி-299)



## வவுனியா பூந்தோட்டத்தில் நடமாடும் சேவை



(வவுனியா)

வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் நேற்று நடமாடும் சேவை இடம்பெற்றது.

156 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு மக்களுக்கு இலகுவாக சேவைகளை பெற்றுக் கொள்ளும் முகமாக வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் குறித்த நடமாடும் சேவை இடம்பெற்றது.


இதேவேளை சிறு குற்றப் பிரிவு முறைப்பாடுகள், தொலைந்த ஆவணங்கள் பற்றிய முறைப்பாடுகள், அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், இணக்க சபை செயற்பாடுகள், கிராம உத்தியோகத்தரின் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை உடனடியாக பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் குறித்த நடமாடும் சேவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-299)

**அறிவிப்பாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் இணையத்தள வானொலி ஒன்றுக்கு பிற்பகல் 3 மணியிலிருந்து பிற்பகல் 6 மணி வரை Talk-shows செய்வதற்கு பெண் அறிவிப்பாளர்கள் தேவை . யாழ் நகரை அண்மித்தவர்கள் மட்டும் அழைக்கவும்

**0769834989**

(12741)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தத் திருவிழா நேற்றுக் காலை சிறப்பாக இடம்பெற்றது. (படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்;
இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா
திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
- அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கோணேச்சரர் ஆலய நில ஆக்கிரமிப்பை தமிழ் மக்கள் எதிர்க்க வேண்டும்

தமிழ் மக்களை நிம்மதியாக வாழவிடக் கூடாதென்பதில் சிங்களப் பேரினவாதிகள் மிகவும் உறுதியாக இருக்கின்றனர்.

இதற்காக அவர்கள் அனுதினமும் தமிழ் மக்களுக்கு இடுக்கண் விளைவிப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

அதிலும் குறிப்பாக வரலாற்றுத் தொன்மை மிகுந்த சிவாலயங்களை இலக்குவைத்து சிங்களப் பேரினவாதம் நடத்துகின்ற நிட்டூரம் கொஞ்சமல்ல.

ஆம், குருந்தூர்மலைச் சிவனாலயத்தை பௌத்த விகாரையாக மாற்றுவதில் அவர்கள் படாப்பாடு படுகின்றனர்.

அமைச்சர்களும் பௌத்த பிக்குகளும் கூட்டாகச் சேர்ந்து குருந்தூர்மலைச் சிவாலயத்தைக் கபளீகரம் செய்யத் தலைப்பட்டுள்ளனர்.

இதில் நீதிமன்றத் தீர்ப்புகளைக்கூட அவர்கள் உதாசீனம் செய்ய முற்படுவது மிகப் பெரிய அபத்தம்.

நிலைமை இதுவாக இருக்க, கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள, காலத்தால் தொன்மைமிகுந்த திருகோணமலை கோணேச்சரர் சிவனாலயத்தைச் சுற்றி பௌத்த அடையாளங்களையும் பௌத்த விகாரைகளையும் அமைத்து வரும் பேரினவாதிகள், இப்போது கோணேச்சரர் ஆலயத்துக்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலத்தைக் கபளீகரம் செய்யத் தலைப்பட்டுள்ளனர்.

இவர்களின் இக்கொடும் செயலுக்கு தொல்லியல் திணைக்களமும் துணை போவதுதான் இந்த நாட்டின் மிகப்பெரும் சாபக்கேடு.

உண்மை, பெரும்பான்மை இனத்தின் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் அவர்களைக் குடியிருத்துவதற்குமாக கோணேச்சரப் பெருமானின் சொத்தை அபகரிக்கின்ற கயமைத்தனத்தைக் கண்டிப்பதற்கு நம் தமிழ் அரசியலில் எவரும் இல்லை.

அதிலும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தர் இருக்கிறாரா? என்று கேட்குமளவில் அவர் இயலாதவராக ஆகிவிட்டார்.

என்னே கொடுமை, முதுமை காரணமாக இயங்க முடியாத போதிலும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை - கட்சித் தலைமையை வைத்திருக்கக்கூடிய ஒரு பெரும் பலயீனம் நம் தமிழ் அரசியலில் மட்டுமே உண்டு.

உரிமைக்காகப் போராடுகின்ற ஓர் இனத்தின் தலைமை அதற்காகக் கடுமையாகப் பாடுபட வேண்டும்.

ஆனால் இங்கோ நடக்கவும் இருக்கவும் முடியாத முதுமையின் இயலாமையே தமிழர் தலைமை எனும்போது, இந்த இனத்துக்கு மீட்சி ஒருபோதும் இல்லை என்பது தெட்டத் தெளிவாகிறது.

இதற்கு மேலாக, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு சில வேளை கோணேச்சரத்தான் எதிராகத் தென்படலாம் என்பதால், அவரும் கோணேச்சரத்து ஆலய நில அபகரிப்புக்கு எதிராகக் குரல் கொடுப்பார் என எதிர்பார்க்க முடியாது.

ஆகவே அன்பார்ந்த தமிழ் மக்களே! தமிழர்களின் தாயகப் பிரதேசமான கிழக்கு மாகாணத்தை அபகரிக்கும் நோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றுச் சான்றை இல்லாதழிக்கும் ஓர் அங்கமே கோணேச்சரர் ஆலய நில அபகரிப்பாகும்.

எனவே குறித்த நில அபகரிப்பைக் கடுமையாக எதிர்க்கத் தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும்.

இல்லையேல் தமிழ் மக்கள் இந்த நாட்டின் வந்தேறு குடிகள் என்பதே மிஞ்சி நிற்கும்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரை போராட்டம் தொடரும்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதியை மீறி இலங்கை அரசு செயற்படுகின்றது. அந்த வாக்குறுதியை மீற வேண்டாம் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரைக்கும் அதற்கு எதிரான எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இதில் சர்வஜன நீதி அமைப்பின் சார்பில் கலந்துகொண்டு சுமந்திரன் எம்.பி. உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று சர்வதேசத்துக்கு இலங்கை அரசு வாக்குறுதி அளித்திருக்கின்றது. ஆனால், இன்று வரை அது நீக்கப்படவில்லை.

இந்த வருட ஆரம்பத்திலே இந்தச் சட்டம் நீக்கப்படுகின்ற வரை இதனை உபயோகிக்கமாட்டோம் என்ற வாக்குறுதி ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும், பல்வேறு சர்வதேச அமைப்புக்களுக்கும் இலங்கை பாராளுமன்றத்திலேயும் ஒரு உறுதிமொழி கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்போதும் உபயோகிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் 3 மாதங்களாகக் காலிமுகத்திடலில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தவர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளவும் உபயோகிப்பதற்கு இந்த அரசு ஆரம்பித்திருக்கின்ற இந்த வேளையில் நாங்கள் இந்தப் போராட்டத்தைத் திரும்பவும் புத்துணர்ச்சி கொடுத்து ஆரம்பித்திருக்கின்றோம். அதாவது இந்த வருடம் பெப்ரவரி மாதம் ஆரம்பித்திருந்த இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை மீளவும் ஆரம்பித்திருக்கின்றோம்.

தற்போது இந்தப் போராட்டத்தில் அனைத்து தொழிற்சங்கங்களுடைய ஒன்றியங்களும், பொதுஜன அமைப்புக்களும் இணைந்துள்ளன.

இந்தப் போராட்ட ஊர்தியை 25 மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்போகின்றோம். வடக்கு, கிழக்குக்கு அப்பால் நாம் செல்கின்றபோது விசேடமாக மாணவர் ஒன்றியமும், தொழிற்சங்கங்களுடைய பிரதிநிதிகளும் அந்தந்த மாவட்டங்களிலே எங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

யாழ்ப்பாணத்திலே இந்த ஊர்தியானது 3 நாட்கள் பயணிக்கும். இங்கே கூடுதல் அளவிலான கையெழுத்துக்கள் திரட்டப்பட வேண்டும். அதற்குப் பின்னர் ஒவ்வொரு மாவட்டங்களாகச் செல்வோம்.

இறுதியில் அம்பாந்தோட்டையில் இந்தப் போராட்டம் நிறைவு பெறும். இதற்கு அனைவரும் முழு ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ம)

## உயர்தர பெறுபேறுகளில் சந்தேகம் வேண்டாம்

### பரீட்சைகள் ஆணையாளர்

(கொழும்பு)

வெளியிடப்பட்ட கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் எவ்வித சந்தேகமும் வேண்டாம் எனவும் பரீட்சை திணைக்களத்தினால் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகள் 100 வீதம் சரியானவை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.ஜி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் அனுமதியின்றி பிரவேசித்த காலியில் உள்ள பாடசாலையொன்றின் உயர்தர மாணவன் சில சட்டவிரோத செயலில் ஈடுபட முற்பட்டுள்ளதாகவும் சட்ட திணைக்களத்தினால் தனியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

எனவே, 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இன்னமும் சரியாக வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்திடம் விடைத்தாள்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல்கள் மற்றும் பெறுபேறுகள் பத்திரமாக இருப்பதாகவும், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளுக்கு இடையில் எவ்வித வித்தியாசமும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## கோவிட் தொற்று 2 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் மேலும் இரண்டு பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த மரணம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,727 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் கனகராயன்குளம் சந்தி, கனகராயன்குளம் ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவ முகாம், குறிசுட்டான்குளம், பரசங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம், புதுவிளாங்குளம் சிவன் கோவில், [illegible]குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலக்கரி விநியோகத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தீர்க்கப்படும் வரை விநியோகம் இடம்பெறாது

(கொழும்பு)

நிலக்கரி விநியோகத்தர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சட்டரீதியாக தீர்க்கப்படும் வரையில் விநியோகம் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

குறைந்த விலையில், நிலக்கரியினை விநியோகிப்பதற்கு விலை மனுவினை பெற்றுக்கொண்ட விநியோகத்தர்கள் மீது இந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியினை பெற்றுக்கொள்வதற்காக, விநியோகத்தர்கள் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை தீர்க்கும் நோக்கில் வலுசக்தி அமைச்சருக்கும், விநியோகத்தர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை சட்டரீதியாக தீர்ப்பது மற்றும் நிலக்கரி கொள்வனவு தொடர்பிலான மாற்று யோசனைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (ம)

# உக்ரைன் அணுமின் நிலையம் ஆபத்தில்

## மீண்டும் எச்சரிக்கை விடுக்கும் ஐ.நா



(ஜெனிவா)

உக்ரைனில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜபோரிஜியா அணுமின் நிலையத்தின் நிலைமை மேலும் ஆபத்தானதாக இருப்பதாக ஐ.நா் அணுசக்தி அமைப்பின் தலைவர் ரஃபேல் க்ரோஸி எச்சரித்துள்ளார்.

ஜபோரிஜியா அணுமின் நிலையத்தின் நிலைமை மேலும் ஆபத்தானதாக உள்ளது.

இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஷெல் தாக்குதல்களை நடத்துவது ரஷ்யாவா? அல்லது உக்ரைனா? என்பதை க்ரோஸி கூறவில்லை. ஆனால் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# மகாராணியின் மறைவினால் சோகத்தில் பிரித்தானியா

## 96 தடவைகள் ஒலித்த ஆலயமணி



(லண்டன்)

பிரித்தானிய ராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவை ஒட்டி, அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள சென் ஆண்ட்ரூஸ் கதீட்ரல் தேவாலயத்தில் ராணி எலிசபெத் வாழ்நாளின் ஒவ்வொரு ஆண்டை குறிக்கும் வகையில் 96 தடவைகள் மணி ஒலித்தன.

70 ஆண்டுகளாக பிரித்தானிய நாட்டின் அரசியாக இருந்த ராணி இரண்டாம் எலிசபெத் உடல்நலக்குறைவால், 96 ஆவது வயதில் பால்மோரல் அரண்மனையில் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

இறுதிச் சடங்கிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரும் நிலையில் 10 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என பக்கிங்காம் அரண்மனை அறிவித்துள்ளது.

இந்நிலையில், பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் உடல் லண்டனுக்கு எடுத்துச்செல்லப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ராணியின் உடல் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் மூன்று நாட்கள் வைக்கப்பட்டு 10 ஆவது நாள், அரசு முறைப்படி இறுதிச் சடங்குகள் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் என தெரியவந்துள்ளது. (நி)

# காலநிலை ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்க ஐ.நாவிடம் நிதி இல்லை

## ஐ.நா.பொதுச் செயலர் குட்டரஸ்



(இஸ்லாமாபாத்)

உலகில் மாறி வரும் காலநிலை மாற்றங்களுக்கு மத்தியில் மோசமான விதங்களில் பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக உதவுவதற்கு தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும் அத்துடன் நிதிப் பங்களிப்பு மற்றும் நிதி சேமிப்பு என்பன அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனி குட்டரஸ் அண்மையில் பாகிஸ்தானில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களை பார்வையிடச் சென்ற போது அங்கு வைத்து தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் தெரிவிக்கும் போது, புவியியல் கணிப்பீடுகளின் படி உலகம் காலநிலை மாற்ற சவால்களுக்கு அதிகமாக முகம் கொடுத்து வருகின்றது.

குறிப்பாக கடல் நீர் மட்டம் அதிகரித்தல், வெப்பம், வரட்சி போன்றவை அதிகளவில் உலக மக்களை தாக்குகின்றன.

இந்த நிலையில் இவ்வாறான ஆபத்துக்களில் இருந்து மக்களை முழுமையாக பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் இன்னமும் எம்மிடம் இல்லை.

எனவே இவற்றை நாம் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுத்த வேண்டும். எதிர்வரும் 2050 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய ரீதியில் சுமார் 50 பில்லியன் மக்கள் இயற்கை பாதிப்புக்களினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

ஏனெனில் அவர்கள் இயற்கை அனர்த்தம் ஏற்படக்கூடிய கரையோரப் பிரதேசங்களில் வாழ்கின்றனர்.

எனவே சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த கலந்துரையாடல்களை மேற்கொண்டு மாற்று பாதுகாப்பு திட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என ஐ.நா பொதுச் செயலாளர் தெரிவித்தார். (நி)

# ராணி எலிசபெத் மறைவுக்கு இந்தியாவில் துக்கதினம் அனுஷ்டிப்பு

(டில்லி)

பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் மறைவை முன்னிட்டு இந்தியா முழுவதும் இன்று ஞாயிற்றுக்கிழமை துக்கத்தினம் அனுசரிக்கப்படும் என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

பிரித்தானிய மகாராணியாக 70 ஆண்டு காலம் பதவி வகித்த இரண்டாவது எலிசபெத், உடல்நலக் குறைவு மற்றும் வயது முதிர்ச்சி காரணமாக உயிரிழந்தார்.

இந்நிலையில், இந்தியாவில் அரச முறை துக்க தினத்தை முன்னிட்டு, இன்று ஞாயிற்றுக்கிழமை தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரச நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்படுவதாகவும் மத்திய உள்துறை அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈரானுக்கு எதிராக புதிய தடைகள்

## அறிவித்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஈரான் உளவுத்துறை அமைச்சு மற்றும் அதன் அமைச்சருக்கு எதிராக அமெரிக்கா தடை விதித்ததுள்ளது.

அல்பேனியா அரசாங்க வலைத்தளங்கள் மற்றும் பிற பொது சேவை இணையத்தளங்களுக்குள் ஊடுருவி கடந்த ஜூலையில் நடத்தப்பட்ட சைபர் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இந்தத் தடை விதிக்கப்பட்டது.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு எதிராக இணைய வழி ஊடுருவல் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈரான் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சைபர் தாக்குதல்களை தொடர்ந்து ஈரானுடனான இராஜதந்திர உறவுகளை அல்பேனியா கடந்த புதன்கிழமை துண்டித்தது. அத்துடன், ஈரானிய தூதர்கள் மற்றும் தூதரக ஊழியர்களை 24 மணி நேரத்திற்குள் வெளியேற உத்தரவிட்டது.

அல்பேனியாவின் இந்த நடவடிக்கைகளை தொடர்ந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஈரான் உளவுத்துறை அமைச்சு மற்றும் அதன் அமைச்சர் மீது அமெரிக்கா தடைகளை விதித்து அமெரிக்க உத்தரவிட்டுள்ளது.

ஈரானின் உளவுத்துறை அமச்சு இணைய வழி தாக்குதல்களை மோசமாக முன்னெடுத்து வருவதாக அமெரிக்க கருவூலத்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பழங்குடி மக்களை பாதுகாக்க அமெரிக்கா புதிய திட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் மெக்சிக்கோ மாநிலத்தில் பல பழங்குடி இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதைய சூழலில் அவர்கள் மத்தியில் போதைப்பொருள் மற்றும் பாலியல் அடிமைத்தனம் போன்ற பல பிரச்சனைகள் காணப்பட்டு வருவதாகவும் அவர்கள் தமது பிரச்சனைகளில் இருந்து விடுபட முடியாதவர்களாக காணப்படுகின்ற நிலை அவாதானிக்கப்பட்டு வந்துள்ளது.

இதனடிப்படையில் அமெரிக் ஜனாதிபதி 'ஜோ பைடனின்' நிர்வாகம் புதிய திட்டம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

அதாவது மேற்படி பழங்குடி மக்களை அவர்கள் இருக்கும் விதமாகவே அவர்களை பாதுகாப்பதற்காக சுமார் 35 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளதாகவும் அத்துடன் விசேட தொலைபேசி அழைப்பு இலக்கத்தை வழங்கியுள்ளதாகவும் ஏதேனும் ஆபத்து மற்றும் நெருக்கடிகள் ஏற்படும் போது மேற்படி தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு ஏற்படுத்தி தெரிவிக்கும் பட்சத்தில் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 250 | 280 |
| உருளைக்கிழங்கு | 280 | 280 | 280 | 300 |
| பச்சைமிளகாய் | 300 | 200 | 300 | 300 |
| தக்காளி | 200 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 200 |
| கோவா | 400 | 400 | 450 | 380 |
| கரட் | 320 | 350 | 400 | 450 |
| பூசணி | 130 | 120 | 140 | 170 |
| புடோல் | 100 | 180 | 140 | 100 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 140 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 180 | 180 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 250 |
| லீக்ஸ் | 300 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 100 | 150 | 160 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1200 | 1100 | 500 | 1200 |
| போஞ்சி | 550 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 65-70 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | -- | 350 | -- | 350 |
| முள்ளங்கி | 120 | 180 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | -- | 60 |
| வல்லாரை | 25 | 100 | -- | 40 |
| ஈரப்பலா | 80 | 80 | -- | 150 |

## புதிதாக 12...

என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபே குணவர்தன, சி.பி.ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, ஜனக பண்டார தென்னக்கோன், எஸ்.பி.திஸாநாயக்க, விமலவீர திஸாநாயக்க, சரத் வீரசேகர, எஸ்.எம்.சந்திரசேன ஆகியோரை அமைச்சர்களாக நியமிக்குமாறு ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முன்மொழிந்துள்ளது.

ஏனைய கட்சிகளில் இருந்து ஜீவன் தொண்டமான் (இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்) மற்றும் ஏ.எல்.எம். அதாவுல்லா (தேசிய காங்கிரஸ்) ஆகியோர் முன்மொழியப்பட்டுள்ளனர். (ம)

## திருக்கோணேஸ்...

திட்டமிட்டு சிங்கள வாணிப நிலையங்களை நிரந்தரமாக அமைப்பதற்கு அவச்ர ஏற்பாடுகள் நடைபெற்ற வருகிறது.

இது குறித்து பலரும் அரசாங்கத்திடம் தமது எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், திட்டமிட்டு அரசின் ஆதரவோடு திருக்கோணேஸ்வரச் சூழல் பறிக்கப்பட்டு வருகிறது. ஆலயத்துக்கு உரித்தான 18 ஏக்கர் நிலப்பரப்புக் காணிக்குள் தொல்லியல் திணைக்களமும், கிழக்கு மாகாண ஆளுநரும் கோவில் நிலத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் இறங்கியிருப்பதைத் தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்காக இக்கண்டனக் கூட்டம் கூட்டப்படுகிறது.

சைவசமய அமைப்புக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுதல் விடுத்துள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் தலைமையில் திருக்கோணமலை கோணேஸ்வரர் ஆலய நிர்வாக சபையினர் உட்பட இக்கூட்டத்தில் கலந்துகொண்டு அங்குள்ள இன்றைய சூழலை தெரியப்படுத்தவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 40 மில்லியன்...

மேலும் 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்தடைந்துள்ள சமந்தா பவர் நேற்று ஜா அல, ஏகல பிரதேச விவசாயிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

இவர்களது பிரச்சினைகளை கேட்டறிந்த சமந்தா பவர் தலைமை யிலான நான்கு பேர் கொண்ட அமெரிக்க தூதுக்குழுவினர், உரம் உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அறிவித்துள்ளனர். (ம)

## அரச வன்முறை...

போன்று இளைஞர், யுவதிகளைக் கைது செய்வதன் மூலம் அரச மிலேச்சத்தனத்தைக் காட்டுவதையே அரசு செய்வது வருகின்றது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதுபோன்ற வன்முறைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல நடிகை தமிதா அபேரத்னவின் நலன் விசாரிப்பதற்காக நேற்று சென்ற எதிர்க்கட்சித் தலைவர், பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒவ்வொருவரும் தாங்கள் நம்பும் ஜனநாயக அபிப்பிராயத்துக்காக முன்நிற்கும் உரிமையை எந்த அரசாலும் அல்லது எந்தத் தரப்பாலும் மீற முடியாது.

இந்த நாட்டில் மக்களின் அடிப்படை உரிமைகளை மீற ஒருபோதும் இடமளிக்க முடியாது" என்றார். (ம)

## தமிழ் அரசியல்...

அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான

# இலங்கைக்கு மேலும் கடினமான தருணங்கள் இருக்கின்றது - சமந்தா பவர்

(கொழும்பு)

தற்போதைய ஆபத்தான நேரத்தில் அமெரிக்கா இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும், அதே நேரம் மேலும் கடினமான தருணங்களும் உள்ளதாக, அமெரிக்காவின் சர்வதேச நிதியுதவி நிறுவனத்தின் பணிப்பாளர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுடனான பிரத்தியேக நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கருடன், இலங்கையின் நெருக்கடி குறித்து தாம் உரையாடியுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். (ம)

பேரெழுச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், யாழ்.மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், யாழ்.மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் யாழ் ஊடக அமையத்திற்கு வருகைதந்து பயணத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். (ம-33,104)

## ஐ.நா அமர்வு...

இலங்கைக்கு கடும் நெருக்கடி நிலை ஏற்படலாம் என அறிய முடிகின்றது.

ரணில் அரசு மீது ஜெனிவாவில் கடுமையான தீர்மானங்கள் அமுல் படுத்தப்படலாம். (ம)

## 20 வயது பெண்...

அதிகாரி அ.ஜெயபால சிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம)

## இல...

ளது.

எனவே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான தற்போதைய பொறுப்புக்கூறல் திட்டத்தை வலுப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளது.

மேலும் தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் மனித உரிமைகள் தொடர்பான கவலைகளை கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்கு இலங்கை தொடர்பான நிபுணர் பொறிமுறையை அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த பொறிமுறைகளின் அவசியத்தை உணர்ந்து, இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளை சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுக் கொண்டுள்ளது. (ம)


## விற்பனையாளர்கள் தேவை

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ரிக்கெற்றுக்களை யாழ்.நகரத்தில் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை. வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட, நலிவுற்ற மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 603 1723 (12739)






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS — புதிய பிரிவுகள் ஆரம்பம்

(12707)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.
TP: 077 780 3970, 074 007 1970


# காரைநகர் - ஊர்காவற்துறை படகுப்பாதையை சீரமைக்குக

## ஆளுநரிடம் கோரிக்கை

(காரைநகர்)

யாழ்.காரைநகர் - ஊர்காவற்துறைப் படகுப் பாதைச் சேவையை சீராக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப் பாதையூடாகப் போக்குவரத்துச் செய்யும் அரச உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இப் பாதைச் சேவை இடம்பெறாமையால் தாங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ள இவர்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ் விடயத்தில் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றது எனவும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

(ம-33,104)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
1. உணவு பரிமாறுபவர் ஆண்/பெண்
2. சிற்றுண்டிகள் தயாரிப்பவர் ஆண்/பெண்
3. பழயூஸ் தயாரிப்பவர் ஆண்/ பெண்
4. துப்பரவு பணியாளர் ஆண்/பெண்

பகுதி நேரம்/ முழு நேரம் (12721)

076 166 1986

## மணமகள் தேவை

1977 ஆம் ஆண்டு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தருக்கு அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

தொடர்பு (12672)

077 728 6050

## இராஜ மருத்துவம்

பேறிஞர் Dr.K பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர்
மீண்டும் யாழ்ப்பாணத்தில் பக்கவாதம், மூட்டுவாதம், சூதகவாயு, நெஞ்சுக்குத்து, நெஞ்சடைப்பு, பாலியல் குறைபாடுகள், தொய்வு, நீரிழிவு, நித்திரையின்மை, மனநோய், நோவு, விஷகடிக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள 076 274 4488

வல்லை வீதி, சங்கானை. (12729)

## இலவச விசா வாய்ப்பு

### அமெரிக்க லொத்தர் விசா

அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4881)

!!அலட்சியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

V2 TRAVELS 0768226244 0768226240

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1993, பூரட்டாதி கி.பாவம் 14, B.Sc(IT) பட்டதாரி, IT நிறுவனத்தில் Software Engineer ஆக பணிபுரியும் அழகிய மணமகளிற்கு Professional Degree முடித்து அரச/ தனியார் துறைகளில் பணிபுரியும் மணமகன் தேவை. (12733)

070 553 7191

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும்- 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-4881)
V2 TRAVELS

எமது கிளைகள்
- பயிற்சிக்கால கைக்கொடுப்பனவு -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4881)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா.

Srilankan Visa Extension இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
### Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்ட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

1 சதுர அடி 150/= இல் இருந்து (12742)

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம். உத்தரவாதம் தரும் பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

உலகத்தரம்மிக்கது
வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை றவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12710)

தொடர்புகளுக்கு:- 076 755 8606, 077 911 6983

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12710)

077 658 5999, 076 436 5814, 077 874 8135


## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி நீர் விளையாட்டுச் சங்கத்திற்கு இணைப்பாளர் மற்றும் நீச்சல் பயிற்சி பயிற்றுவிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் உள்ள நீச்சல் பயிற்சி தடாகத்தில் மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கு உயிர் பாதுகாப்பு நீச்சல் பயிற்சிகளை வழங்கி வரும் கிளிநொச்சி மாவட்ட நீர் விளையாட்டுச் சங்கத்திற்கு இணைப்பாளர் மற்றும் நீச்சல் பயிற்சி பயிற்றுவிப்பாளர் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரி
1. க.பொ.த .உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் ஆரோக்கியமுடையவராக இருக்க வேண்டும்.
3. மாவட்ட, மாகாண மட்ட விளையாட்டுக்களில் பங்குபற்றியிருத்தல் வேண்டும்.
4. குழுவாக பணியாற்றக் கூடிய மனப்பாங்குடையவராகவும், நற்பண்புகள் கொண்டவராகவும் இருத்தல்.
5. நீச்சல் பயிற்சிகளை வழங்க கூடிய தகுதிகளை கொண்டவராக இருந்தல் வேண்டும்.
6. ஆண்கள் விரும்பத்தக்கது.
7. பொருத்தமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி தகுதிகளை கொண்டவர்கள் தங்களது சுய விபரக் கோவையினை 30.09.2022க்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவேண்டும். நேர்முகத் தேர்வுகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும்

Dr. மா. தவராஜா
தலைவர்

கிளிநொச்சி நீர் விளையாட்டுச் சங்கம்
குரு ஹாட்வெயர்
கராடிப்போக்கு,
கிளிநொச்சி. (12736)

sathyan.health@gmail.com
077 744 5161

## 64 ஆவது பிறந்த தினமும் 19 ஆம் மாத நினைவுதினமும்



செல்வரட்ணராஜா அமரர் யோகராணி (லீலா)

11.09.2022

ஆத்ம சாந்தியடைய இறைவனை வணங்குகின்றோம்

ஓம் முருகா (12732)

தகவல்
கணவன் செல்வரட்ணராஜா
பிள்ளைகள்

தற்காலிக முகவரி : உடுவில் தெற்கு, கர்த்தர் கோவிலடி.
நிரந்தர முகவரி : பட்டிநகர், மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.